RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 01 யூலை 2022 இதழ்:- 10

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரச் சட்ட மூலத்திற்கு அனுமதி வழங்கியது உயர்நீதிமன்றம்!



கனடாவின் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 104 ஆம் இலக்க தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்ட மூலத்திற்கு அனுமதி வழங்கியிருக்கும் ஒன்றாரியோ உயர் நீதிமன்றம், இது உலகமகா யுத்தம் மற்றும் ஏனைய சர்வதேச மட்டத்திலான போராட்டங்கள் தொடர்பில் கவனம் (3ம் பக்கம் பார்க்க)

## கால் வைக்கும் குவாட்

## இலங்கையில் மனிதஉரிமை மீறலில் ஈடுபட்டோரை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த ஐ.நா.சபை ஆதரிக்காது என்கிறார் பிரிட்டன் இணைஅமைச்சர்

இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதி மன்றத்தில் (ஐ. சி. சி.) முற்படுத்துவதற்கான பரிந்துரைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையிடமிருந்து தேவையான ஆதரவு கிடைக்காது. இவ்வாறு மதிப்பிட்டுள்ளதாக பிரித்தானியாவின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் மற்றும் வெளிநாட்டு இணை அமைச்சர் விக்கி போர்ட் தெரிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)



## பொருளாதார நெருக்கடியும் தமிழ்மக்களின் எதிர்கால வாய்ப்புக்களும்!



இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை சர்வதேச சக்திகள் எவ்வாறு கையாள்கின்றன என்பதை நாம் பார்க்கின்றோம். இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் - அரசியல் தீர்வு என்பவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு இலங்கை வழமையான தந்திரோபாயங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றது. அதனை நாம் சில தினங்களுக்கு முன்னர் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நிகழ்த்திய உரையின் மூலம் பார்த்தோம்.(17ம் பக்கம் பார்க்க)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



**Team SIVA** WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE
HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Central Park / Bramalea

**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth

**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex

### Kennedy & Progress

**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza

### Dixie/Clark

**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton


**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf
FOR LEASE

**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan
FOR LEASE

**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரச் சட்ட மூலத்திற்கு அனுமதி வழங்கியது உயர்நீதிமன்றம்!



கனடாவின் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 104 ஆம் இலக்க தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்ட மூலத்திற்கு அனுமதி வழங்கியிருக்கும் ஒன்றாரியோ உயர் நீதிமன்றம், இது உலகமகா யுத்தம் மற்றும் ஏனைய சர்வதேச மட்டத்திலான போராட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையிலான மாகாணக் கல்விக் கொள்கையை ஒத்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கனடாவின் ஒன்ராரியோ மாகாண பாராளுமன்றத்தில் 104ஆம் இலக்க தமிழினப் படுகொலை கடந்த 2021 ஆம் ஆண்டு மேமாதம் அறிவூட்டல் வாரச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அச் சட்டமூலத்தின் பிரகாரம் மேமாதம் 12 – 18 ஆம் திகதி வரையான ஒரு வார காலம் ஒன்ராரியோ மாகாணத்தில் தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரமாகப் பிரகடனப்படுத்தப்படும். தமிழினப் படுகொலை தொடர்பிலும் உலகில் இடம் பெற்ற ஏனைய படுகொலைகள் தொடர்பிலும் ஒன்ராரியோ மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஒருவார காலத்தில் அறிந்து கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே அச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

அச்சட்டமூலம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே அதிருப்தி வெளியிட்டிருந்த நிலையில், அண்மையில் கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் மூன்று புலம்பெயர் அமைப்புக்கள் அதனை நீக்க வேண்டுமெனக் கோரி ஒன்ராரியோ உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தன.

அவ்வமைப்புகளில் ஒன்றான இலங்கை கனேடிய செயற்பாட்டுக் கூட்டிணைவு என்ற அமைப்பு, தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானது என்றும் 'தமிழனப்படுகொலை' என்ற விடயம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கதிற்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களால் எவ்வித ஆதாரங்களுமின்றி உருவாக்கப்பட்ட தவறான கருத்தியலாகும் என்றும் குறிப்பிட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் அறிவூட்டல் மற்றும் நினைவுகூரல் ஆகிய நோக்கங்களுக்காக தமிழினப் படுகொலையை அங்கீகரித்து சட்டம் வகுப்பதற்கு அனுமதிவழங்கி ஒன்றாரியோ உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அது மாத்திரமன்றி இது உலக மகாயுத்தம் மற்றும் ஏனைய சர்வதேச மட்டத்திலான போராட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையிலான மாகாணக் கல்விக்கொள்கையை ஒத்ததாகும் என்றும் உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தத் தீர்ப்பு தமிழ் மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும், மிகவும் வரவேற்கத்தக்க தீர்ப்பு என்றும் கனேடிய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் புலம்பெயர் தமிழ்மக்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இலங்கையில் மனிதஉரிமை மீறலில் ஈடுபட்டோரை சர்வதேச நீதிமன்றத்தில் பாராப்படுத்த ஐ.நா.சபை ஆதரிக்காது என்கிறார் பிரிட்டன் இணைஅமைச்சர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் தொழில்கட்சியின் ஸ்டீபன் மோர்கன் எம்.பி. 'இலங்கையில் தமிழ்சமூகத்துக்கு எதிரான மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்துவதற்கு தங்களின் துறை என்ன நடவடிக்கை எடுக்கிறது? என்று அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே விக்கி போர்ட் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பாதுகாப்பு சபையின் ஆதரவை பெறுவதில் தோல்வி அல்லது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தினால் சர்வதேச நீதிமன்றத்தில் பொறுப்புக்கூறச் செய்யும் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்று இதன்போது அமைச்சர் எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக பல ஆண்டுகளாக கோர் குழுவிலுள்ள எங்கள் பங்காளிகளுடன் பல ஆண்டுகளாக சர்வதேச முயற்சிகளை எடுத்துள்ளோம்.

2021 மார்ச் 23இல் ஐ. நா. மனிதஉரிமைகள் பேரவையில் 46–1 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இது மனிதஉரிமைகள் மீதான சர்வதேச ஈடுபாட்டுக்கான



தொடர்ச்சியான கட்டமைப்பை வழங்குகிறது.

மனித உரிமைகளில் முன்னேற்றம் காணுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுப்பதுடன், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் விரிவான பொறுப்புக்கூறல செயல்முறையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறோம்.

தெற்காசியாவின் இராஜாங்க அமைச்சர் விம்பிள்டன் பிரபு (தாரிக்) அஹமட் ஜனவரி 2022இல் இலங்கைக்கு சென்றார். அவர் வடக்கு, கிழக்கு, கொழும்புக்கு சென்று தமிழ் பிரதிநிதிகள் உட்பட சிவில் குழுக்களை சந்தித்து கலந்துரையாடினார். நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் என்றும் அமைச்சர் கூறினார்.

## மயிலிட்டி மக்கள்ஒன்றியம் - கனடா முக்கிய அறிவித்தல்!

மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் பதினாறாவது (16) கோடை கால ஒன்றுகூடல் எதிர் வரும் யூலை மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு மோனிங்சைட் (**Morning side**) பூங்கா தொகுதி 8இல் (**Area 8**) ஆரம்பமாகும்

மயிலிட்டி மக்கள் அனைவரையும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தொடர்புகளுக்கு திரு. குணசீலன் 647–330–9625

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**




றொரன்றோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

## கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

**05 யூலை 2022 செவ்வாய்- ஆனி உத்தரம்**

**உபயம்:- லோகநாதன் (பாபு) சாந்தி குடும்பம்**

**11 யூலை 2022 திங்கள்- பிரதோஷ விரதம்**

**16 யூலை 2022 சனி- ஆடிப்பிறப்பு**

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

1.0% முதல் 1.5% வரை

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்க தேசிய பாதுகாப்புச் சட்டங்களைப் பயன்படுத்த வேண்டாமென ஐ.நா.சபை வலியுறுத்தல்

இலங்கையைப் பொறுத்தமட்டில் பொதுமக்கள் ஏன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றார்கள் என்ற காரணத்தை அறிந்து கொள்வதற்கும் தீர்வை வழங்குவதற்குமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதை விடுத்து, அவை அரசாங்கத்தின் நிறைவேற்றுத் தீர்மானங்கள் மூலம் அடக்கப்படுவதாகக் கடுமையான கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெற்சொஸி, தமது சட்டரீதியான உரிமையைப் பயன்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்குவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்புச் சட்டங்களைப் பயன்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெற்சொஸி துனிசியா, ஆர்மேனியா, இலங்கை மற்றும் சிம்பாபே ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு, அந்நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்து, அதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பான அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில், சில ஒன்று கூடல்களைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்தினால் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான காரணம் மற்றும் அவர்களது அதிருப்தி என்னவென்பதை அறிந்து கொள்வதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக, நிறைவேற்றுத் தீர்மானத்தின் ஊடாக அந்த ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்படுகின்றன.

அது மாத்திரமன்றி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டங்களுக்கான விடையாக பொலிஸார் பிரசன்னமாவதுடன், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமையை மீறும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் தொடர்புடைய விவகாரங்களுக்கான பொறுப்புக்கூறல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமத்துவமான சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகள், சிறந்த வேலைச்சூழல் மற்றும் கல்விக்கான உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கோரி அமைதியான முறையில் போராடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமைதி வழியிலான ஒன்றுகூடல்கள் தொடர்பில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் சட்டரீதியான தேவைப்பாடு சார்ந்த கொள்கைகள் மற்றும் அவசியத்தன்மை என்பவற்றுக்கு ஏற்புடையதாக அமைவது அவசியம் என்பதுடன், அவை வெறுமனே மேம்போக்காகப் பிரயோகிக்கப்படக்கூடாது.

ஆகவே இலங்கை அரசாங்கம் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பில் தெளிவானதும், சட்டத்திற்கு அமைவானதுமான வழிகாட்டல்களைத் தயாரிக்கவேண்டியது அவசியமாகும். அத்தோடு அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான தமது சட்ட உரிமையைப் பயன்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்குவதற்கு பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்புச் சட்டங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினரை இலக்குவைப்பதற்கும் கைது செய்வதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கப்



பெற்றுள்ளன. அதேவேளை கடந்த 2021 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழான வழிகாட்டல்கள் இலங்கையின் மனித உரிமைகள் சார் கடப்பாடு மேலும் மீறப்படுவதற்கு வழிவகுக்கும் என்பது மிகுந்த கரிசனைக்குரிய விடயமாகும்.

மேலும் கடந்த மார்ச்மாத இறுதியிலிருந்து நாடளாவிய ரீதியில் பெருமளவிலான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அவசரகால நிலைப் பிரகடனம் மற்றும் அவசரகால வழிகாட்டல்கள் வெளியீடு உள்ளடங்கலாக அதனுடன் தொடர்புபட்டதாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

அதுமாத்திரமன்றி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப்பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டமை மற்றும் பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தியமைக்காகப் பாதுகாப்புப்படையினரால் துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்டமை ஆகிய சம்பவங்கள் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கமானது அர்த்தமுள்ள பாதுகாப்புக் கட்டமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வதுடன் இராணுவ மயமாக்கலை முடிவிற்குக்கொண்டுவரவேண்டும்.

அத்தோடு பாராளுமன்றப் பேரவை, காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புக்கள் உரியவாறு இயங்குவதற்கு அவசியமான உதவிகள் வழங்கப்படவேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ராதிகா எத்தியோப்பியா தொடர்பான சர்வதேச மனிதஉரிமைகள் நிபுணர் குழுவின் உறுப்பினராக நியமனம்!



எதியோப்பியா தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர் குழுவின் உறுப்பினராக இலங்கையைச்சேர்ந்த ராதிகா குமாரசுவாமி நியமிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் ஃபெட்ரிகோ விலெகஸ் 28 யூன் 2022 செவ்வாய்கிழமை அறிவித்துள்ளார். ஏற்கனவே மேற்குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களாக கென்யாவைச் சேர்ந்த காரி பெற்றி முருங்கி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவென் ரற்னர் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் நியமிக்கப்பட்ட நிலையிலேயே (18ம் பக்கம் பார்க்க)

# "நந்தி" என்னும் மானிடன் மறைந்தான்



சிறந்த சமூக சேவையாளன் திரு.நந்தீஸ்வரர் வேலுப்பிள்ளை அவர்கள் 27 யூன் 2022 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

நீதி நியாயம் தர்மம் கண்ணியம் கொண்ட ஒரு மானிடன் அண்ணர் நந்தி அவர்கள். மிக மிகக் கண்ணியமாகவும் நேர்மையாகவும் பொதுச் சேவையில் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றியவர் அவர்.

தன் சமூகத்திற்கு இனத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு யாரும் சொல்லத் தேவையில்லை. அது தனது கடமை என்று உணர்ந்து தானாகவே முன் வந்து சேவையாற்றியவர் அண்ணர் நந்தி அவர்கள்.

பொது வாழ்வில் ஈடுபட்டு தங்களை மேல் நிறுத்திக் கொள்ள முற்படும் சுயநலவாதிகளை அவர் எவராக இருந்தாலும் நேருக்கு நேர் தட்டிக் கேட்கும் துணிவும் நேர்மையும் கொண்டவர் அண்ணர் நந்தி அவர்கள்.

சமயப் பணியாகட்டும் பொதுப் பணியாகட்டும் தன்னால் முடிந்தவற்றை எந்தப் பிரதிபலனும் கருதாமல் அது கடவுளுக்கு நான் செய்யும் பணி. அதற்கு ஏன் பிரதி உபகாரம் என்று பல சந்தர்ப்பங்களில் அவர் பகிர்ந்து கொண்டதை நான் அறிவேன்.

கனடிய மண்ணில் சுய விளம்பரம் இன்றி - முகநூல் போட்டோக்கள் இன்றி பொதுத்தொண்டு செய்ய நினைப்பவர்கள் சந்தித்தும் பழகியும் இருக்க வேண்டியவர் அண்ணர் நந்தி அவர்கள்.

அவரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் என்ற ஒரு வரியில் ஆறுதல் கொள்ள முடியவில்லை. எங்கள் நெஞ்சு நிறைந்தவரே! நெஞ்சு உள்ள வரை நினைவுகள் நிலைத்திருக்கும். ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் வருமாறு.

**இடம்:-**

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave, Markham,**
**ON L3R 5G1, Canada**

**காலம்:-**

**Saturday, 02 Jul 2022 - 5:00 PM - 9:00 PM**

**Sunday, 03 Jul 2022 - 1:00 PM - 2:00 PM**

**கிரியை:-**

**Sunday, 03 Jul 2022**

**2:00 PM - 3:30 PM**

**தகனம்:-**

**Sunday, 03 Jul 2022 4:00 PM**
**Highland Hills Crematorium**
**12492 Woodbine Avenue, Gormley,**
**Ontario, L0H 1G0, Canada**


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# 21வது திருத்தத்தால் கோட்டாவின் அதிகாரங்கள் குறைக்கப்படாது! சிங்கள மக்களை ஏமாற்றும் செயல் என்கிறார் சுமந்திரன்



அமைச்சரவையின் அனுமதி அளித்துள்ள அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமானது நிறைவேற்றப்பட்டாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரங்களுடன் தான் பதவியில் நீடிக்கப் போகின்றார் என்பதால் இந்தத் திருத்தம் வெறுமனே மக்களை ஏமாற்றும் செயற்பாடு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த திருத்தச் சட்டமானது அடுத்துவரவுள்ள ஜனாதிபதிக்கான அதிகாரங்களையே குறைக்கும் வகையில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், 19ஆவது திருத்தச் சட்டத்தினையும் விடவும் வலுக்குறைந்தாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

21 ஆவது திருத்தச்சட்டத்தின் வரைவு இன்னமும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையில் அது சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் இறுதியான தீர்மானத்தினை எடுக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் பங்கேற்றதன் அடிப்படையில் தன்னுடைய நிலைப்பாட்டினை தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 21 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக நீதியமைச்சர் விஜயதாவுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் பங்கேற்றதன் அடிப்படையில் அதன் உள்ளடக்கம் சம்பந்தமாக சில விடயங்களை அறிய முடிந்துள்ளது. முதலாவதாக, தற்போதைய உத்தேச 21ஆவது திருச்சட்டமானது, ஏற்கனவே காணப்பட்ட 19ஆவது அரசியலமைப்புத் திருத்தினை விடவும் மிகவும் வலுக்குன்றியதாகவே காணப்படுகின்றது. அவ்வாறான திருத்தச்சட்டமொன்றுக்கு ஆதரவளிப்பதில் எவ்விதமான பலன்களும் இல்லை.

அதேநேரம், 21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரங்களுடன் தான் பதவியில் இருக்கப்போகின்றார்.

ஏனென்றால், நிறைவேற்றப்படும் 21 ஆவது திருத்தச்சட்டமானது, அடுத்த ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் தான் நடைமுறைக்கு வரப் போகின்றது. ஆகவே அதனால் எவ்விதமான பயன்களும் தற்போது கிடைக்காது.

கோட்டா கோ கம போராட்டாக்கரர்கள் உட்பட நாடாளவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் தன்னெழுச்சியான போராட்டங்கள் பதவியில் உள்ள ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றன.

அதே நேரம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முழுமையாக ஒழிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றன. ஆகவே அவ்விரண்டு விடயங்களிலும் எவ்விதமான மாற்றங்களின்றி அரசியலமைப்பில் திருத்தமொன்றை மேற் கொள்வதானது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

அத்துடன், இந்த அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் தமிழ்த் தேசிய பிரச்சினை தொடர்பில் எவ்விதமான விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படாமை பெரும் பின்னடைவாகும். அவ்விதமான 21ஆவது திருத்தச்சட்டத்தினை நாம் எவ்வாறு ஆதரிப்பது என்பது தான் என்னுடைய நிலைப்பாடு என்ற அவர் மேலும் தெரிவிக்கையில் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இந்த நிலையில் எந்தவொரு இடைக்கால நடவடிக்கைகளிலும் ஆளும் கட்சி உள்வாங்கப்படக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதேபோன்று ஊழல் நிறைந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க இணங்கியமை தவறு என்றும் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்னவென்பதை சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என பிரிட்டனைச் சேர்ந்த பிரபல இராஜதந்திரி வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு தெரிந்து கொள்ளா விட்டால், உதவிகள் தேவைப்படும் மக்களுக்குப் பதிலாக ஊழல் மிகுந்த அரசியல்வாதிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் உதவுவதற்கான அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் அதனை மேற்கோளிட்டு கருத்து வெளியிட்டுள்ள எம்.ஏ.சுமந்திரன், இதன் காரணமாகவே ஜனாதிபதி உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு தான் வலியுறுத்துவதாக கூறியுள்ளார். அத்தோடு பிரதான எதிர்க்கட்சிகள் இதனை ஓர் நிபந்தனையாக முன்வைத்தமை சரியான விடயம் என்றும் அதே போன்று ஊழல் நிறைந்த ஒரு அரசாங்கத்துடன் பிரதமர் இணைந்தமை தவறாகும் என்றும் சுமந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு! செயலணியின் பரிந்துரைகள் என்னென்ன?

ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் அறிக்கை செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் 29 யூன் 2022ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தொழில் வல்லுநர்கள், அரச சாரா அமைப்புகள், மதக் குழுக்கள், பல்வேறு இனக் குழுக்கள், பல்கலைக்கழக சமூகம் மற்றும் சட்ட வல்லுநர்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய 1,200க்கும் மேற்பட்டவர்களின் சாட்சிகளை உள்ளடக்கிய 43 பரிந்துரைகள் மற்றும் 2 பிற்சேர்க்கைகளுடன் இந்த அறிக்கை 8 அத்தியாயங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




### செயலணி பரிந்துரைத்தவை என்னென்ன?

1.அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளின் தேர்தல்களுக்கு பயன்படுத்தும் நிதி, எங்கிருந்து கிடைத்தது என்பது தொடர்பில் ஆராய்ந்து, கணக்காய்வு செய்வதற்கு புதிய சட்டமொன்று எதிர்வரும் தேர்தலுக்கு முன்னதாக உருவாக்கப்பட வேண்டும்.

2. நீதிமன்ற நடவடிக்கையின் ஊடாக, குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் வழக்கு விசாரணைகள் நிறைவு பெறும் வரை, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சு பொறுப்புக்களை அவர்களுக்கு வழங்காத வகையில் புதிய சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களை மக்கள் பிரதிநிதிகளாக, மக்களே தெரிவு செய்யும் பட்சத்தில், அவர்களை உறுப்பினர் பதவியில் மாத்திரம் இருக்க அனுமதி வழங்க முடியும்.

3.அரசியல்வாதிகளின் சொத்து விபரங்கள் தொடர்பிலான கணக்காய்வுகளை நடத்துவதற்கு, கணக்காய்வு ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரத்தை வழங்க வேண்டும். அரசியல்வாதிகளின் சொத்துக்கள் குறித்த தகவல்களை பொதுமக்களுக்கும் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட வேண்டும்.

4. மதங்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மத மாற்று நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கும் புதிய சட்டத்தை கொண்டு வர வேண்டும்.

5. தன்பாலின உறவு கொள்வது தவறு என குற்றவியல் கோவை சட்டத்தின் 365 ''அ' சரத்தில் உள்ளது. அந்த சரத்தை, குற்றவியல் கோவை சட்டத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும், தன்பாலின திருமணத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

6.திருநங்கை சமூகத்தின் பாலினம், சமூக அந்தஸ்த்து ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும் வகையிலான அடையாள சான்றிதழ் ஒன்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் திருநங்கை சமூகம், சட்டத்திற்கு அமைவாக தற்போது ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேணடும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

7. திருநங்கை சமூகத்தின் நலத்திட்டத்திற்குஅரசதலையீட்டில் வேலை திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

8. யுத்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலி தரப்பினரை சமூகமயப்படுத்தும், புனர்வாழ்வு திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு, அவர்கள் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட வேண்டும். (இந்த குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள், சமூகமயப்படுத்தலின் போது, சமூகத்தில் வாழக்கூடியவர்கள் என்பதை புனர்வாழ்வு நடவடிக்கைகளின் போது உறுதிப்படுத்தியதன் பின்னரே விடுவிக்க வேண்டும்)

9. நீதிமன்ற நடவடிக்கைகளை ஒளி மற்றும் ஒலி வடிவில் பதிவு செய்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

10. மொழி, இனம் என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவு செய்ய அனுமதி வழங்கக்கூடாது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளின் பெயர்களை மாற்றுவதற்கு காலவகாசம் வழங்கி, கட்சிகளின் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு கட்சிகளின் பெயர்களை மாற்றாத பட்சத்தில், கட்சியை தடை செய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

11. நீதிமன்ற அவமதிப்பு குறித்த தண்டனைக்கான காலம் உள்ளிட்ட விடயங்களை நிர்ணயம் செய்யும் வகையிலான புதிய சட்டமொன்று கொண்டு வரப்பட வேண்டும்.

12. கல்வி அமைச்சின் விடயதானங்களுக்கு அமைய, அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (இலங்கையில் சில குழந்தைகள் மதம் சார்ந்த கல்வியை மாத்திரம் கற்பதை தவிர்த்து, 16 வயது வரை கல்வி அமைச்சின் விடயதானங்களுக்கு அமைய, பாடசாலை கட்டாய கல்வி அவசியம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கட்டாய கல்விக்கு மேலதிகமாக வேறு கல்விகளை கற்க முடியும்)

13. விற்பனை நிலையங்களில் ஹலால் பொருட்களுக்கு வேறு பிரிவொன்றை ஆரம்பிக்க வேண்டும். (2020ம் ஆண்டு பெப்ரவரி மாதம், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான கண்காணிப்பு குழுவொன்றினால் முன் வைக்கப்பட்ட அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.)

14. பொது இடங்களில் முழுமையாக முகத்தை மூடும் வகையில் ஆடை அணிவதற்கு தடை விதிக்க வேண்டும்.

15. ஜாதியை வெளிப்படுத்தி, ஊடகங்களில் விளம்பரம் பிரசுரிப்பதற்கு தடை விதிக்க வேண்டும்.

16. விசேட தேவையுடையவர்களின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்திற்கு அமைவானதாக, விசேடதேவையுடையவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டு வரப்பட வேண்டும். விசேட தேவையுடைவர்களுக்கான தற்போது காணப்படுகின்ற பிரத்தியேக பாடசாலைகளை தவிர்த்து, அவர்களை ஏனைய மாணவர்களுடன் கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

17. ஆதிவாசி சமூகத்தின் கலாசாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வன பாதுகாப்பு கட்டளை சட்டம் திருத்தப்பட வேண்டும். (ஆதிவாசிகள் வனப் பகுதிக்கு சென்றால், தற்போது கைது செய்வதற்கான அதிகாரம் பாதுகாப்பு பிரிவிற்கு உள்ளது). இந்த கட்டளை சட்டம் திருத்தப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆதிவாசிகளுக்கான அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

18.கைதிகளுக்கான சுகாதாரம், இடவசதி, உணவு போன்ற விடயங்களை உறுதி செய்து, ஐக்கிய நாடுகள் சபையின் கைதிகள் தொடர்பிலான சட்டத்தை பின்பற்றி, சிறைச்சாலைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

19.தந்தை சொத்துக்களை தமது பிள்ளைகளுக்கு கையளிக்காது உயிரிழக்கும் பட்சத்தில், அந்த சொத்து மூத்த ஆண் பிள்ளைக்கு சேரும் என்ற சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்து, மூத்த பிள்ளைக்கு சொத்துக்கள் சேர வேண்டும் என்பதை உறுதிப்படுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

20. தனது கணவர் உயிரிழக்கும் பட்சத்தில், இஸ்லாமிய பெண்களுக்கு 4 மாதங்கள், 10 நாட்களுக்கு வழங்கப்படும் விடுமுறை தொடர்பான சட்டம் திருத்தப்பட்டு, மத வேறுபாடுகள், கணவர் அல்லது மனைவி என்ற வேறுபாடுகள் இன்றி, ஒரு மாத கால விடுமுறை வழங்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வருடமொன்றில் வழங்கப்படும் (22ம் பக்கம் பார்க்க)



# “ஜனாதிபதி கோட்டா” என்ற இலட்சினை நீடித்தால் ஒட்டுமொத்த சர்வதேச ஒத்துழைப்புக் கிடையாது - தயான்

நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ற இலட்சினை நீடித்தால் ஒட்டுமொத்த சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் கிடைப்பதில் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று இராஜதந்திரி கலாநிதி.தயான் ஜயத்திலக்க தெரிவித்துள்ளார்.

பாரிய அளவில் உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கும் இந்தியாவினால் இலங்கையை தொடர்ந்து தோளில் சுமந்து கொண்டு செல்ல முடியாது என்றும் ஒட்டுமொத்த சர்வதேச தரப்பினது ஒத்துழைப்புக்களின் மூலமே இலங்கையால் நெருக்கடிகளிலிருந்து மீளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான தற்போதைய அரசாங்கம் பல்வேறு சர்வதேசத் தரப்புக்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்துள்ள நிலையில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைகளில் இருந்து மீள்வதாக இருந்தால் முதலில் சர்வதேசத்தின் ஒட்டு மொத்தமான ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் அதற்கு தற்போதுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ற இலட்சினை தான் பிரதான தடையாக உள்ளது. அதற்கு பல காரணங்கள் உள்ளன.



குறிப்பாக கூறுவதனால், நாட்டின் பொரு ளாதார நெருக்கடியானது, ‘நபர் ஒரு வரால் ஏற்படுத்தப்பட்டது’ என்று சர்வதேச நாணயநிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா சுட்டிக் காட்டியுள்ளார். அந்த ஆழமான கூற்று, ஆட்சி அதிகாரத்தில் உள்ள நபரே தவறான, தாமதமான தீர்மானங்கள் காரணமாக நாட்டில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன் குறித்த நபரும் தான் தவறான தீர்மானங்களை எடுத்துள்ளதாக பகிரங்கமாகவே ஒத்துக் கொண்டும் உள்ளார். அவ்விதமான ஒருவர் பதவியில் இருக்கின்றபோது சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்கள் எவ்வாறு உதவிகளை வழங்கும்.

அடுத்து அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கோட்டாபயவை ஏதேச்சதி காரத் தலைவர் என்றே கருதுகின்றன. அதற்கு அவரது காலத்தில் இடம் பெற்ற ஜனநாயக விரேதச் செயற்பாடுகள் அடிப்படையாக-ின்றன. அவ்விதமான நிலைப்பாட்டில் உள்ள சர்வதேச நாடு கள் எவ்வாறு தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும்.

அடுத்து, நெருக்கடிகள் ஆரம்பித்து தீவிரமடைந்து கொண்டிருக்கும் நிலையிலும் தற்போது வரையில் உள்நாட்டில் உள்ள தலை சிறந்த பொருளாதார நிபுணர்களை ஒருங்கிணைத்து எதிர்காலம் குறித்து பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுமில்லை. பாதை வரைபடமொன்று கூட தயாரிக்கப்படவில்லை.

அதேபோன்று இலங்கை குறித்த பரீட்சமுள்ள சர்வதேச பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றிருக்கலாம். குறிப்பாக உலக வங்கியின் முன்னாள் ஆலோசகரும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோசப் போன்றவர்களை அணுகியிருக்காலம்.

அவ்விதமான எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. அதேநேரம், வெளிவிவகார அமைச்சில் படைத்தரப்பு அதிகாரி நீக்கப்பட்டு சிவில் பிரதிநிதியான அருணி விஜேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விதமானர்கள் முன் வந்து நாட்டின் வெளிவிவகார பெருளாதார கொள்கையை மாற்றியமைத்து அணுகுமுறைகளை முன்னெடுக்க வேண்டும். தற்போது வரையில் அவ்விதமான முயற்சிகள் இடம் பெற்றமைக்கான பதிவுகள் இல்லை.

இந்த நிலையில் அயல்நாடான இந்தியா, பாரியளவில் இலங்கைக்கு உதவிகளை வழங்கி தனது தோளில் சுமந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவினால் இலங்கையின் ஒட்டுமொத்த தேவைகளை பூர்த்தி செய்து தொடுந்தும் தோளில் சுமக்க முடியாது.

அதேநேரம், கொடையாளர்கள் மாநாடு ஒன்றை நடத்துவது என்றால் கூட சாத்தியமாகாத நிலையில் தான் நாடு உள்ளது. குறித்த மாநாட்டில் கடன்களை மீளச் செலுத்தல் உள்ளிட்ட எதிர்காலத் திட்டங்கள் குறித்த வரைவு கூட இல்லை.

ஒருவேளை வரைவு தயாரிக்கப்பட்டால் கூட நிபுணர்கள் குழு இல்லாத நிலையில் அதில் கையொப்பமிடுபவர்கள் யார் என்ற பிரச்சினைகள் உள்ளன. அவ்விதமான நிலையில் எவ்வாறு சர்வதேசம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று எதிர்பாக்க முடியும் என்றார்.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



உ
சிவமயம்









# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.com

## ஸ்ரீ கற்பகவிநாயகர், ஸ்ரீ நாகபூசணி அம்மன், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

## மும்மூர்த்தி அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

### 03.07.2022 ஞாயிறு தொடக்கம் 19.07.2022 செவ்வாய் வரை

எம்பெருமான் அடியார்களே!

ஐயப்பன் ஆலயத்தில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கும், கஜவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏக காலத்தில் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 19.07.2022 செவ்வாய்க்கிழமை வைரவர் சாந்தி வரை மூன்று சுவாமிகளுக்கும் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளதால், Covid - 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அடியார்கள் வருகை தந்து எம்பெருமானைத் தரிசித்துப் பலன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திருவிழா ஆரம்பம்: 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
**சப்பறத் திருவிழா: 15.07.2022 வெள்ளிக்கிழமை மாலை**
**தேர்த் திருவிழா: 16.07.2022 சனிக்கிழமை பகல்**
**தீர்த்தத் திருவிழா: 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
**திருக்கல்யாணமும் பூங்காவனமும்: 18.07.2022 திங்கட்கிழமை**
**வைரவர் சாந்தி: 19.07.2022 செவ்வாய்க்கிழமை**

## கிரியாகால விபரம்

03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணிக்கு கணபதி ஹோமம்

**தினமும்:** மாலை 6:00 மணிக்கு அபிசேகம் | இரவு 8:00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை
இரவு 7:30 மணிக்கு விசேட பூசை | இரவு 8:15 மணிக்கு சுவாமி வீதி வலம் வருதல்
இரவு 9:15 மணிக்கு பிரசாதம் வழங்கல், நடைசாத்தல்

| | |
|---|---|
| தேர்த்திருவிழா 16.07.2022 | 16.07.2022 சனிக்கிழமை காலை 7:00 மணிக்கு சங்காபிசேகம் 9:00 மணிக்கு விசேட பூசை, 10:00 மணிக்கு வசந்தமண்டப பூசை ஆரம்பித்து, தொடர்ந்து 11:00 மணிக்கு மூன்று அழகிய சித்திரத் தேரில் பிள்ளையார், நாகபூசணி அம்மன், முருகப் பெருமான் வீதிவலம் வரும் அற்புதக் காட்சி நடைபெறும். நண்பகல் 12:00 மணிக்கு பச்சைசாத்தப் பெற்று தொடர்ந்து 1:00 மணிக்கு பிராயச்சித்த அபிசேகம் நடைபெற்று தேரடி உற்சவம் இடம் பெறும். |
| தீர்த்தம் 17.07.2022 | 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு மூன்று சுவாமிகளுக்கும் தீர்த்தத் திருவிழா நடைபெறும். |
| பூங்காவனம் 18.07.2022 | 18.07.2022 திங்கட்கிழமை மாலை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று பிள்ளையார், நாகபூசணி அம்பாள், முருகப் பெருமான் ஆகிய மூன்று சுவாமிகளுக்கும் பூங்காவன உற்சவம் நடைபெறும். |
| வைரவர் மடை 19.07.2022 | 19.07.2022 செவ்வாய்க்கிழமை மாலை வைரவ சுவாமிக்கு விசேட அபிசேகம், மடை, பூசை என்பன நடைபெறும். |

முக்கிய குறிப்பு: அடியார்கள் ஒன்ராறியோ அரச Covid-19 விதிமுறைக்கு அமைய சுகாதார பாதுகாப்பைப் பின்பற்றி ஆலய தரிசனத்தை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் தேசத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


25 யூன் 2022 முதல் 01 யூலை 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா கார்த்திகேசு

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 28 யூன் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நடராஜா கார்த்திகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம்

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 92வது பிறந்தநாள் நினைவாக



### திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி அவர்களது 92வது பிறந்த நாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் 27 யூன் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி அவர்களது பிறந்த நாளை நினைவு கூர்ந்து அன்னாரைப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசையா மகேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மகேஸ்வரி அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மரூபன் கந்தையா

யாழ்.அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மரூபன் கந்தையா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 07 யூலை 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பத்மரூபன் கந்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 50வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னம்பலம் நாகலிங்கம் நடராஜா

சரவணையைப் பிறப்பிடமாகவும் வேலணையை வதிவிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் பிரசித்த நொத்தாஸ் திரு பொன்னம்பலம் நாகலிங்கம் நடராஜா அவர்களின் 50வது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நடராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



25 யூன் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதுமை வைத்தியநாதன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 யூன் 2022 திங்கட்கிழமை யாழ்.அல்லைப்பிட்டியைச் சேர்ந்த அமரத்துவமாது திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி அவர்களது 92வது பிறந்த நாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது 8வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது 8வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரானா வினோதினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அபிராம் ரானாவின் 4வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் அபிராம் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீரெங்கநாதன் சரோஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிகிர்தன் ஸ்ரீரெங்கநாதனின் 25வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் நிகிர்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



29 யூன் 2022 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சேவரெத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 யூன் 2022 புதன்கிழமை சரவனையைப் பிறப்பிடமாகவும் வேலணையை வதிவிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் பிரசித்த நொத்தாரிஸ் திரு பொன்னம்பலம் நாகலிங்கம் நடராஜா அவர்களது 50வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 யூன் 2022 புதன்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 யூன் 2022 வியாழக்கிழமை பிரம்டன் கனடாவில் வசிக்கும் திரு மதியழகன் வடிவேலு அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு மதியழகன் அவர்கள் தனது குடும்பத்தினர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



01 யூலை 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதுமை வைத்தியநாதன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து கனடா திருநாளை முன்னிட்டு அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 80வது பிறந்தநாள் வாழ்த்து



### திருமதி செல்லத்துரை தில்லைநாயகி

20 யூன் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செல்லத்துஐர தில்லை நாயகி அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செல்லத்துரை தில்லைநாயகி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை 80 காணும் திருமதி செல்லத்துரை தில்லைநாயகி அவர் கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள்

## 4வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் அபிராம் ரானா

28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரானா வினோதினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அபிராமின் நான்காவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அபிராம் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை நான்கு காணும் செல்வன் அபிராம் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் தமிழ் மகனாக வாழ வேண்டுமென அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார் கள்

# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு HOME
வாகனம் AUTO
மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE
படகு BOAT
கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## Pre-Arranging: A Wise Choice...

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

உ

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
26-06-2022
ஞாயிறு

**மஞ்சம்**
05-07-2022
செவ்வாய்

**சப்பறம்**
08-07-2022
வெள்ளி

**தேர்**
09-07-2022
சனி

**தீர்த்தம்**
10-07-2022
ஞாயிறு

**பூங்காவனம்**
12-07-2022
செவ்வாய்

**அ**ம்பிகை அடியார்களே!

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. சுபகிருது வருடம் ஆனித் திங்கள் 12ம் நாள் (26-06-2022) கார்த்திகை நட்சத்திரமும், சித்த யோகமும் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 26ம் நாள் (10-07-2022) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் 15 தினங்கள் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
**Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.com**

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி
கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி
ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth





TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca

# கோட்டா கோ கமவுடன் பேசுதல்



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -


PEOPLE'S BANK
Kurunegala
Date 09/06/2022
S.M.M.SHAFI  S.S.M. Shafi
Pay ... Or Order
Rupees Two Million Six Hundred Seventy Five Thousand Eight Hundred Sixteen and Cents Forty Eight Only
Rs. **2,675,816.48
K.C.M. ...
012100139025195
SEC.MINISTRY OF HEALTHCARE & NUTRITION
On Government Account
Not Negotiable
Valid for 30 Days
Please do not write below this line
"337496" 7135"012: 902519500l" 55

மருத்துவர் ஷாபி சிகாப்தீனை அவருடைய மத அடையாளம் காரணமாக துன்புறுத்தியதில் ஒரு பங்கை வகித்த அதே மருத்துவ கட்டமைப்புக்கு தனது சம்பள நிலுவையை திரும்பிக் கொடுத்ததன் மூலம் எல்லாவற்றுக்குள்ளும் அதிகம் அன்பான ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இன்றைய பொசன் போயா நாளில் அவர் எங்களுக்கு பகவான் புத்தரின் செய்தியை அனுப்பியிருக்கிறார் இவ்வாறு ருவிற்றரில் பதிவிட்டிருப்பவர் பேராசிரியர் சரோஜ் ஜெயசிங்க. கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஒரு மருத்துவ நிபுணர்.

மருத்துவர் ஷாபி சிகாப்தீன் குருநாகல் போதனா மருத்துவமனையில் மகப்பேற்று நிபுணராக இருந்தவர். குருநாகல்போதனா வைத்தியசாலையில் சட்டவிரோத கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஷாபி சிஹாப்தீன் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார். அவர் சட்டவிரோதமான முறையில் சொத்துக் குவித்ததாகவும். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

எனினும் குற்றம் நிரூபிக்கப்படாத காரணத்தால் ஷாபி விடுவிக்கப்பட்டார். அவ்வாறு விடுவிக்கப்பட்ட பின் அவருக்கு வழங்கப்பட்ட சம்பள நிலுவைத் தொகையான 2.67 மில்லியன் ரூபாயை அவர் குருநாகல் ஆஸ்பத்திரிக்கே திரும்பவும் தானமாக கொடுத்து விட்டார். எந்த மருத்துவ கட்டமைப்பு அவர் கீழ்த்தரமாக அவமதிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்ட போது அவரை பாதுகாக்கத் தவறியதோ அதே மருத்துவ கட்டமைப்பின் முகத்தில் அறைவது போல அவர் தனது சம்பள நிலுவையைத் தானமாக வழங்கி இருக்கிறார். ஒரு பொசன் நாளன்று ஒரு முஸ்லீம் மருத்துவர் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதிகளுக்கு கௌதம புத்தரின் போதனை ஒன்றை செயலில் காட்டி இருக்கிறார்.

ஆனால் இதுபோன்ற அகிம்சா வழிமுறைகளில் இருந்து இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பு கற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகம் தான். ஏனெனில் கடந்த வாரம் குருந்தூர் மலையில் அமைந்திருக்கும் ஆதி சிவன் ஆலய வளாகத்தில் ஒரு புதிய தாதுகோப கலசத்தைக் கட்டியெழுப்பும் வேலைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருக்கத்தக்கதாக அதை மீறி அரச உபகரணங்களான தொல்லியல் திணைக்களமும் படையினரும் பிக்குகளின் உதவியோடு அதைக் கூட்டாக முன்னெடுத்தார்கள். தமிழ் மக்களின் எதிர்ப்புக் காரணமாக அம் முயற்சி தடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு புறம் பொருளாதார நெருக்கடி. உலகில் அத்தியாவசிய பொருட்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் எரிபொருள், சமையல் எரிவாயு போன்றன இலங்கைத்தீவில் லக்சறி பொருட்களாக மாறி இருக்கின்றன. ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக் கடங்காமல் ஏறிக் கொண்டே போகிறது. இன்னொருபுறம் பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக சிங்கள மக்கள் காலிமுகத்திடல், கண்டி போன்ற இடங்களில் கிராமங்களை அமைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானதொரு பின்னணியில் தான் அரசின் உபகரணங்கள் ஆகிய தொல்லியல் திணைக்களம், அரசபடைகள் போன்றன ஒரு மரபுரிமை யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்கின்றன. அதாவது அரசாங்கம் அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தத் தயாரில்லை என்று பொருள். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம் ஜெனிவாவில் 50வது மனித உரிமைகள் கூட்டத் தொடரில், கடந்த திங்கட்கிழமை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் என்ன பேசினார் என்பது. மனித உரிமைகள் ஆணையத்தின் 46-1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன். இந்த பொறிமுறையானது துருவப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் மட்டுமே உதவும். இதேவேளை, இந்த சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் வளங்களில் பயனற்ற மற்றும் உதவியற்ற வீண் நிலையை ஏற்படுத்தும் என்ற எமது நம்பிக்கையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்று பீரிஸ் கூறியிருக்கிறார். அதாவது போர்க்குற்றங்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூறத் தயாரில்லை என்று பொருள். இறந்த காலத்துக்கு பொறுப்புக் கூறத் தயாரில்லை என்பது அதன் தர்க்கபூர்வ விளைவுகளைப் பொறுத்தவரை நல்லிணக்கத்துக்கு தயார் இல்லை என்றுதான் பொருள்.ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னரும் இது விடயத்தில் அரசுக் கொள்கை மாறவில்லை என்று பொருள்.

இவ்வாறானதொரு அரசியல் சூழலில் தான் இம்மாதம் நடுப்பகுதியளவில் முன்னிலை சோசலிசக் கட்சியின் உயர்மட்டக் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது. காலிமுகத்திடலிலும் ஏனைய இடங்களிலும் போராடும் தரப்புகளின் மத்தியில் முன்னிலை சோசலிச கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட மாணவர் அமைப்பும் காணப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின் காலிமுகத்திடல் போராட்டம் ஒப்பீட்டளவில் சோரத் தொடங்கி விட்டதாக கருதப்படும் ஒரு பின்னணியில், வடக்கு கிழக்கிலிருந்து அதிக தொகை தமிழ் மக்கள் காலிமுகத்திடலில் வந்து தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்று முன்னிலை சோசலிசக் கட்சி எதிர்பார்க்கின்றது. காலிமுகத்திடலிலும் கண்டியிலும் போராடிக் கொண்டிருக்கும் தரப்புக்களோடு ஏன் தமிழ் மக்கள் பெருமெடுப்பில் இணையவில்லை என்பதற்குரிய விளக்கத்தை காலிமுகத்திடலில் வந்து தமிழ் மக்கள் கூற வேண்டும் என்று அக்கட்சி எதிர்பார்க்கின்றது.

காலிமுகத்திடலில் திறக்கப்பட்டிருப்பது அரசுக்கு எதிரான ஒரு போராட்டக்களம். அங்கே சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பல்வேறு அரசியல் நிலைப்பாட்டைக் கொண்ட சக்திகளும் கூடுகின்றன. அவரவர் தமது நிலைப்பாட்டை, அதிருப்தியை, ஆதங்கத்தை, விரக்தியை, கோபத்தை கொட்டித் தீர்க்கும் ஓர் இடமாக அது காணப்படுகிறது.

இலங்கைத்தீவில் அரசாங்கத்துக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் போராடலாம் என்ற நம்பிக்கையை பலப்படுத்தும் ஒரு வெளி அது. எனவே அங்கே தமிழ் மக்கள் வரவேண்டும். தங்களுக்குள்ள குறைகளை அங்கே கூறவேண்டும். தமது நிலைப்பாட்டை அங்கு பகிரங்கமாக தெரிவிப்பதன் மூலம் தமிழ் மக்கள் அந்தக் களத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று குமார் குணரட்னம் எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

வடக்கு கிழக்கிலிருந்து தொகையான மக்கள் அந்தப் போராட்டக்களத்துக்கு வருவார்களாக இருந்தால் அது ஒரு புதிய பரிமாணத்தை அடையும் என்றும் அவர் எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் அதிகாரத்தை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். கோட்டா கோ கம போன்ற போராட்ட கிராமங்களை தொடர்ந்து பரவலாக விஸ்தரிப்பதன் மூலம் மக்கள் அதிகார சபைககளை நாடாளுமன்றத்திற்கு வெளியே உருவாக்க வேண்டும் என்றும், அவ்வாறு மக்கள் அதிகாரம் பலம் பெறும் பொழுது அரசியல்வாதிகள் வழிக்கு வருவார்கள் என்றும் அவர் எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களோடு உரையாடும் பொழுது முன்னிலை சோஷலிஸ கட்சியானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறது என்று குமார் குணரட்னம் தெரிவித்தார். ஆனால் சுயநிர்ணய. உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதைக் குறித்து அவர் தெளிவாகச் சொல்ல தயங்கினார். ஏற்கனவே ஊடகங்களுக்கு அவர் வழங்கிய செவ்விகளிலும் அதைக் காணமுடிகிறது.

சிங்கள மக்களை ஒரு தீர்வை நோக்கி தயார்படுத்த வேண்டும் என்றும், அதற்காக தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று தேவை என்றும் அவர் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின் போராட்டத்தில் ஒருவித தொய்வு ஏற்பட்டிருப்பதை அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால் அந்தப் போராட்ட கிராமத்தை தொடர்ந்து உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மக்கள் எழுச்சிகளின் விளைவாகத் தான் மகிந்த பதவி விலகினார், பஸில் பதவி விலகினார், ஒரு புதிய பிரதமர் வந்திருக்கிறார், கடந்த இரு மாத காலப்பகுதிக்குள் அமைச்சரவை இரண்டு தடவைகளுக்கு மேல் மாற்றப்பட்டிருக்கிறது. போராட்டங்களின் பலனாகத்தான் இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் கூறுவது சரி தான். தென்னிலங்கையில் கடந்த இரு மாதங்களுக்கு மேலான காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எல்லாவற்றுக்கும் மக்கள் எழுச்சிதான் மூலகாரணம். ஆனால் அந்த மக்கள் எழுச்சிகளின் கனிகளில் பெரும்பாலானவற்றை ரணில் விக்கிரமசிங்க சுவீகரித்துக் கொண்டு விட்டார் என்பதனை அவர் ஏற்றுக் கொண்டார். அந்த மாற்றங்களை ஏன் தமிழ் மக்கள் விலகி நின்று ஒரு சாட்சியாகவே அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை தமிழ் செயற்பாட்டாளர்கள் அவருக்கு விளங்கப்படுத்தினார்கள். தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது அமைப்பு மாற்றம் அதாவது சிஸ்டத்தில் மாற்றத்தை அல்ல.மாறாக அடிப்படை மாற்றம், அதாவது, கட்டமைப்பு மாற்றத்தையே என்று அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

காலிமுகத்திடலில் போராடும் எல்லா அமைப்புகளையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com



கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
இவ்வாண்டின்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
அனுமதி இலவசம்
FREE ADMISSION
JOYTHI
Blazing Minds
2022
Super Singer
Balaji
Super Singer
Vanathi
Super Singer
Abarna
POWERED BY
ANANTH
THARMALINGAM
RAJESH
LINGANATHAN
416-939-9525
THE REMAX Guys
RE/MAX
COMMUNITY
PLATINUM SPONSOR
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
SILVER SPONSOR
Niuniu's
ROOFING INC.
www.niuniuroofing.ca
647-567-8564
Mega Tuners
GRAND MUSICAL EVENT
WITH CANADIAN SINGERS & SUPER SINGERS
JULY 30 - 31 ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8
FOR ADD AND VENDORS PLEASE CONTACT : 416-321-6104, 416-321-7558

# ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடியும் தமிழ்மக்களின் எதிர்கால வாய்ப்புக்களும்!

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை சர்வதேச சக்திகள் எவ்வாறு கையாள்கின்றன என்பதை நாம் பார்க்கின்றோம். இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் – அரசியல் தீர்வு என்பவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு இலங்கை வழமையான தந்திரோபாயங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றது. அதனை நாம் சில தினங்களுக்கு முன்னர் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நிகழ்த்திய உரையின் மூலம் பார்த்தோம்.

அதேவேளையில் இவ் விடயத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதில் தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடி அரசியல் ரீதியாக தமிழர்களுக்கு சில வாய்ப்புக்களைக் கொடுத்திருப்பதைப் போலவே பொருளாதார ரீதியாகவும், சில வாய்ப்புக்களைக் கொடுத்திருக்கின்றது. ஆனால், இதனை நாம் எந்த வகையில் கையாள்கிறோம் என்பதில் தான் எமது வெற்றி தங்கியுள்ளது. கிடைத்துள்ள இந்த களத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதில் தமிழ்த் தலைமைகள் எந்தளவுக்கு அவதானமாக காய் நகர்த்துகின்றார்கள் என்பதும் முக்கியமான கேள்வி.

முப்பது வருடகாலமாகத் தொடர்ந்த போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களின் வாழ்க்கை முறையில் பல மாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அது வரை காலமும் அவர்கள் எதிர்கொண்ட பொருளாதாரத் தடைகள் பெருமளவுக்கு நீக்கப்பட்டன. வடக்கு கிழக்கில் வங்கிகளின் செயற்பாடுகளும் அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் தமிழ் மக்களின் சேமிப்புக்கள் தென் பகுதியிலேயே முதலீடுகளாகின. அதாவது, தமிழ் மக்கள் வங்கிகளில் சேமிக்கும் பணத்தில் பெரும்பகுதி – தென் பகுதியிலுள்ள அபிவிருத்திகளுக்கே முதலீடு செய்யப்பட்டன.

போர்க்காலத்தில் புலம் பெயர்ந்தவர்கள் தாயகத்தில் உள்ள தமது உறவுகள் வசதியாக வாழ வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு அதிகளவுக்குப் பணத்தை அனுப்பத் தொடங்கியிருந்தார்கள். யாழ்ப்பாணத்துக்கு இவ்வாறு அனுப்பப்பட்ட பணத்தில் பெரும்பகுதி வீடுகளைக் கட்டுவதற்கும் அல்லது வீடுகளைத் திருத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலும் ஒவ்வொரு சந்தியிலும் ஒன்றோ இரண்டோ திருமண மண்டபங்கள் கட்டப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை மூடப்பட்ட நிலையில் தான் கிடக்கின்றன. நிலையான சொத்தாக இருக்கும் என்பதால் பணம் உள்ளவர்கள் அவற்றில் முதலீடு செய்தார்கள்.

இதனைவிட சைக்கிள்களில் திரிந்தவர்கள் மோட்டார் சைக்கிள்களை வாங்கி அவற்றில் பயணம் செய்யத் தொடங்கினார்கள். மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்களின் தகவல்களின்படி 2010க்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் தான் அதிகளவுக்கு மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது.

அதாவது, புலம் பெயர்ந்த மக்களால் அனுப்பப்பட்ட பணத்தில் பெரும்பகுதி வேலை வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய அல்லது பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட துறைகளில் முதலீடு செய்யப்படவில்லை. அதற்காக மக்கள் ஊக்குவிக்கப்படவும் இல்லை.

வன்னியில் முன்னாள் போராளிகள் சிலரது முயற்சியால் சிறிய சிறிய தொழிற்சாலைகள் சில உருவாக்கப்பட்டன என்பது உண்மை தான். பெரும் சிரமத்தின் மத்தியில் தான் – அதிகளவுக்கு கடன்களைப் பெற்று அவற்றை அவர்கள் முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

வடக்கில் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் அமைக்கப்பட்ட பேப்பர் தொழிற்சாலை ஒன்றுதான் போருக்குப் பின்னர் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளில் பிரதானமானது. ஐ.பி.சி. நிறுவனத்தினால் அது அமைக்கப்பட்டது. உள்ளூர் வளங்களை அதிகளவுக்குப் பயன்படுத்தி அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய ஒன்றாகவும் அதுதான் இருக்கின்றது. ஆனால், அது கூட அதன் இரண்டாவது கட்ட வளர்ச்சிக்குச் செல்லவில்லை. அவ்வாறு சென்றிருந்தால் இன்று உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகைகளுக்குத் தேவையான அச்சிடுவதற்கான காகிதத்தை அவர்களால் வழங்கியிருக்க முடியும். மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களை அவர்கள் தயாரித்திருக்கலாம். அந்த வளர்ச்சியை அந்த நிறுவனமும் காணவில்லை.



போருக்குப் பின்னர் உருவாகிய தமிழர்களின் ஓரளவுக்கு ஆடம்பரமான வாழ்க்கை முறையை தற்போது உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. இந்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு எமது வாழ்க்கை முறையில் மாற்றம் ஒன்றை நோக்கி நாம் செல்ல வேண்டும் என்ற தேவையையும் அது உணர்த்தியுள்ளது. அதன் மூலமாகவே எமது எதிர்காலத்தை நோக்கி முறையான திட்டமிடல் ஒன்றை நாம் செய்ய முடியும்.

போர் இடம் பெற்ற காலப் பகுதியிலும் எம்மிடம் எரிபொருட்கள் இருக்கவில்லை. எரிவாயு இருக்கவில்லை. மின்சாரம் இருக்கவில்லை. இதனை விட இரசாயண உரங்கள் உட்பட பல பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்தது. அப்போதைய தலைமை அனைத்துக்குமே மாற்றான எதனைப் பயன்படுத்தலாம் என்பதில் அக்கறை காட்டியது. அது தொடர்பில் தேடல்கள் இடம் பெற்றன. அதன் பலனாக சில கண்டு பிடிப்புக்களும் வெளி வந்தது. தேவையும் தேடல்களும் பல கண்டு பிடிப்புக்களுக்கு காரணமாகியது.

இப்போது சிறிலங்காவில் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடியையும் அவ்வாறு எமக்குச் சாதகமாக – எமது சுயதேவைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு நாம் பயன் படுத்திக் கொள்ள முடியும். அதனை இலக்காகக் கொண்டு நாம் செயற்பட வேண்டும். தற்போதைய பொருளாதார நெருக்கடி இது குறித்த தேடல்களை தமிழர் தாயகப் பகுதிகளில் அதிகரித்திருப்பதால், அதனை சரியான முறையில் வழிப்படுத்துவதன் மூலமாக அதிகளவு பலனைப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்கும். தற்போதைய நெருக்கடி உணவுப் பாதுகாப்பில்தான் அதிகளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், ஒப்பீட்டளவில் பார்க்கும் போது நாட்டின் ஏனைய பகுதிகளைவிட தமிழ்ப் பகுதிகளில் அதன் பாதிப்பு குறைவாக இருப்பதாகவே தெரிகின்றது. பாதிப்பு இல்லை என்று நான் சொல்லவில்லை. பாதிப்பு குறைவாக இருக்கின்றது என்பதைத்தான் சுட்டிக் காட்ட முற்படுகின்றேன். இதற்கு பல காரணங்கள் உள்ளன.

அதேவேளையில் பயோகாஸ் உற்பத்தி, சூரிய சக்தி மின்கலங்களைப் பயன்படுத்துவது போன்றவற்றிலும் வடபகுதி முன்னணியில் இருப்பது கவனிக்கத்தக்கது. பயோகாஸ் போன்றன பொதுப் பயன்பாட்டுக்கு வரவில்லை என்றாலும் கூட, தனிப்பட்ட முறையில் பலர் இதனை தமது இல்லங்களில் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இது தொடர்பிலான தொழில் நுட்ப அறிவை அவர்கள் தாங்களாகவே வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனை சரியான முறையில் நெறிப்படுத்தி அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு நிறுவன ரீதியான அணுகுமுறை அவசியம். அதனை அரசாங்கம் வழங்கும் என எதிர்பார்க்க முடியாது. பொது அமைப்புக்கள் தான் அவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

விவசாய நடவடிக்கைகளிலும் மக்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை அண்மையில் காண முடிகின்றது. பொது அமைப்புக்கள் பல இதில் அதிகளவுக்கு அக்கறை காட்டி இலவசமாகவே பயிர்களையும், அவற்றைச்செய்கை பண்ணுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்று. பொதுமக்களும் இதனால் பெருமளவுக்கு கவரப்படுகின்றார்கள்.

ஆனால், உற்பத்தி பெருகும் போது அவற்றை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். எரிபொருள் பிரச்சினையால் வெளி மாவட்டங்களுக்கு பொருட்களை அனுப்ப முடியாத நிலை இதற்கு காரணம். அண்மைக் காலத்தில் வாழைப்பழத்தின் விலை யாழ்ப்பாணத்தில் பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு அது தான் காரணம். இதனால், விவசாயிகள் அதிகளவுக்கு நட்டத்தை எதிர்கொள்கின்றார்கள்.

தமிழ் மக்கள் கவனம் செலுத்த வேண்டிய மற்றொரு விடயத்தை இது தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது. அதாவது, இவ்வாறு அதிகளவுக்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ரின்களில் அடைத்து ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவுக்குள்ளது. அதாவது – விவசாயத்தில் கவனம் செலுத்தும் அதேவேளையில் அதனுடன் சம்பந்தப்பட்ட சிறியளவிலான கைத்தொழில் முயற்சிகளும் அவசியம். இவற்றின் மூலம் எம்மிடம் குவிந்திருக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தியே பலருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க முடியும். அதிகளவு அந்நியச் செலவாணியையும் பெற்றுக் கொள்ள முடியும் இது உதாரணத்துக்காக சொன்ன ஒரு விடயம் மட்டும் தான். இது போன்ற பல துறைகள் உள்ளன.

**கட்டுரையாளர்:**
**ஈழநாட்டிற்காக யாழில் இருந்து**
**– பாரதி இராஜநாயகம் –**

புலம் பெயர்ந்த தமிழர்கள் பாரிய முதலீடுகளை செய்வதில் சில பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், சிறியளவிலான தொழிற்சாலைகள் சிலவற்றை சுமார் ஒரு கோடி ரூபா செலவிலேயே அமைக்க முடியும். உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி இவற்றை செயற்படுத்த முடியும். வாழை நாரிலிருந்து பட்டு உட்பட பல கைப்பணிப் பொருட்களைச் செய்ய முடியும். இதற்கான வளங்கள் தாயகத்தில் குவிந்துள்ளன. வடபகுதியைப் பொறுத்தவரையில் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் கிடைத்திருக்கும் மற்றொரு வாய்ப்பு பலாலி விமான நிலையம் திறக்கப்படுவது. பாதிப்பான சில விடயங்கள் இதில் இருந்தாலும் கூட சாதகமான பல அம்சங்கள் இதில் இருப்பதால் எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு இதனை நாம் பயன்படுத்த முடியும்.

பலாலியைத் திறந்து விடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் விரும்பவில்லை என்பது இரகசியமானதல்ல. அதனை மூடி விடுவது தான் அரசாங்கத்தின் விருப்பமாக இருந்தது. இதன் புனரமைப்பு சிறிலங்கா அதிகாரிகள் ஒத்துழைப்பை வழங்கவில்லை. தமிழ் மக்களுடைய பொருளாதாரம் இதன் மூலம் வளர்ச்சியடையும், கட்டுநாயக்கவின் முக்கியத்துவம் இதனால் குறைந்து விடலாம் என்ற அவர்களுடைய அச்சம்தான் இதற்கு காரணம்.


இந்தியாவின் அழுத்தம் தான் இது துரிதமாக திறக்கப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளது. கேந்திர ரீதியில் இலங்கை மீதான கட்டுப்பாட்டை அதிகரிக்க இது போன்ற திட்டங்கள் இந்தியாவுக்கு அவசியம்.

வடக்கு கிழக்கில் சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்கு இது பெருமளவுக்கு உதவக் கூடியது. அந்த வகையில் தமிழ் நாட்டுடனான உறவுகளைப் பலப்படுத்தவும், அந்நியச் செலவணியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இது பெருமளவுக்கு உதவும். தமிழகத்துடனான உறகளைப் பலப்படுத்துவது அரசியல் ரீதியாகவும் தற்போதைய நிலையில் முக்கியமானது.

இந்தியாவின் ஒரு ரூபா இப்போது இலங்கை ரூபாவின் ரூபாவின் பெறுமதியில் ஐந்து ரூபாவாக அதிகரித்திருப்பதும் இந்திய மக்களைக் கவரக்கூடியது. அதனால், பலாலியைப் பயன்படுத்தி அவர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு வருவதை ஊக்குவிக்கலாம்.

ஆக, சிறிலங்காவின் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய ஒன்று. இதற்கான (22ம் பக்கம் பார்க்க)

# கால் வைக்கும் குவாட்



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -

இந்தியா, 1987இல் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டு அளவுக்கு ஆழமானதாக இல்லா விட்டாலும், பொருளாதார மற்றும் பாதுகாப்பு ரீதியான நெருங்கிய உறவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலங்கையுடன் நெருக்கமானதொரு உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முனைகிறது

கடந்த வியாழக்கிழமை முற்பகலில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட விமானத்தில் வந்திறங்கிய, இந்திய வெளிவிவகாரச் செயலர் வினய் குவாத்ரா தலைமையிலான குழுவினர், கொழும்பில் பரபரப்பான பேச்சுக்களை நடத்தி விட்டு அன்று மாலையே புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர்.

ஜனாதிபதி பிரதமர், வெளிவிவகாரச் செயலாளர், மத்திய வங்கி, நிதியமைச்சு, திறைசேரி அதிகாரிகளுடன் இந்திய அதிகாரிகள் மாறி மாறி பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்திய நிதியமைச்சின் பொருளாதார விவகாரங்களுக்கான செயலர் அஜய் சேத், தலைமை பொருளாதார ஆலோசகர் கலாநிதி அனந்த நாகேஸ்வரன், மற்றும் வெளிவிவகார அமைச்சின் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்துக்கான இணைச் செயலர் கார்த்திக் பாண்டே ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

அவர்களின் பயணம், 1987இல், இந்திய இலங்கை உடன்பாடு கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, இருந்த சூழலை நினைவுபடுத்தியது. அந்தக் காலகட்டத்தில் வடக்கில் போர் நெருக்கடி அதிகரித்திருந்தது. தெற்கில், ஜே.வி.பி.கிளர்ச்சி தீவிரமடைந்து கொண்டிருந்தது.

அப்போது இலங்கை அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள, இந்திய வெளிவிவகார செயலர் மேனன் மற்றும் உயர் அதிகாரிகள், இந்திய உயர்ஸ்தானிகராக இருந்த ஜே.என்.டிக்சிட் போன்றவர்கள் மாறி மாறி கொழும்புக்கும், புதுடில்லிக்கும் இடையில் பறந்து கொண்டிருந்தார்கள்.

திடீரென, புதுடில்லியில் இருந்து கொழும்பு வரும், இந்திய விமானங்கள், அடுத்த சில மணி நேரங்களிலேயே சந்திப்புகளை முடித்துக் கொண்டு புறப்பட்டுச் செல்லும்.

அது போலத் தான், இந்திய வெளிவிவகாரச் செயலர் வினய் குவாத்ரா தலைமையிலான குழுவும் காலையில் வந்து மாலையில் புறப்பட்டுச் சென்றிருக்கிறது.


முதலீடுகளை ஊக்குவித்தல், இணைப்பு மற்றும் பொருளாதார தொடர்பை வலுப்படுத்துதல் மூலம் இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவ, இந்தியா தயாராக இருப்பதாக அவர்கள், ஜனாதிபதி, பிரதமர் போன்றவர்களிடம் உறுதியளித்திருக்கிறார்கள்.

எனினும் இந்த உதவிகள் எவ்வாறான முறையில் வழங்கப்படும் என்ற வழிவரைபடம், இரண்டு தரப்புகளில் இருந்தும், வெளிப்படுத்தப்படவில்லை.

மேலோட்டமாக மட்டுமே, தகவல்கள் பகிரப்பட்டிருக்கின்றன. ஆனால், விரிவாகவும், ஆழமாகவும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை, இந்தியத் தரப்பின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அண்டை நாட்டுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையின் அடிப்படையில், இந்தியா-இலங்கை இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்சி தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் வெளிப்படையான, சுமூகமான மற்றும் ஆக்கபூர்வமான முறையில் நடைபெற்றன என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப்





பட்டுள்ளது.

முதலீடுகளின் ஊடாக இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவுதல் என்பது, அவசர கதியின் முன்னெடுக்கப்படக் கூடியதொரு வேலைத் திட்டமா என்ற கேள்வி இருக்கிறது.

இலங்கைக்கு இப்போது, அவசர கதியிலான திட்டங்களே அவசியம். அதற்கு இந்தியா எவ்வாறு பதிலளிக்கப் போகிறது என்பதை, இந்த இணக்கப்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்கள் வெளிவரும் போது தான் தெரிந்து கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், இந்தியாவின் தற்போதைய அணுகுமுறைகளை உற்று நோக்கும் போது, இலங்கையுடன் நெருக்கமானதொரு உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முனைகிறது என்பது புலனாகிறது.

அது, 1987இல் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டு அளவுக்கு ஆழமானதாக இல்லாவிட்டாலும், பொருளாதார மற்றும் பாதுகாப்பு ரீதியான நெருங்கிய உறவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதாக இருக்க கூடும். இது இந்தியாவினது வியூகமாக மாத்திரம் எனக் குறிப்பிட முடியாது.

சீனாவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும், இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில், தங்களின் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்கான நாற்கரக் (குவாட்) கூட்டின் திட்டங்களுக்கமைவாகவே, இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிகிறது.

இலங்கைக்கு இந்தியா தனியாக கிட்டத்தட்ட 5 பில்லியன் டொலர்கள் வரை குறுகிய காலத்துக்குள் உதவியாக வழங்கியிருக்கிறது. இதற்கு மேல் இந்தியா தனிப்பட இலங்கைக்கு உதவிக் கொண்டிருக்க முடியாது.

அதேவேளை, சீனாவின் அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், இலங்கையை அதனிடம் விட்டுக் கொடுக்கவும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தயாராக இல்லை. ஆபிரிக்க நாடான ஜிபோட்டியை கடன்பொறியில் சிக்க வைத்த சீனா, அங்கு அமெரிக்க படைத்தளத்துக்கு அருகிலேயே தனது தளத்தை அமைத்துக் கொண்டது.

அந்த தளத்தை சீனா இப்போது பலப்படுத்தி வருகிறது. அங்கு விமானம் தாங்கி கப்பல் ஒன்றையும் நிறுத்தவுள்ளது.

அது போன்றே, பசுபிக் பெருங்கடலில் அவுஸ்திரேலியாவின் செல்வாக்கிற்கு உட்பட்ட சொலமன் தீவுகளுடன், அண்மையில் சீனா செய்து கொண்ட பாதுகாப்பு உடன்பாடு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஏனென்றால், சொலமன் தீவுகளில் சீனா தனது பாதுகாப்பு நலன்களைக் கட்டியெழுப்புவது அவுஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளுக்கும், பசுபிக்கில் உள்ள அமெரிக்க தளங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும்.

ஜிபோட்டி மற்றும் சொலமன் தீவுகள் விவகாரத்தில், மேற்குலக நாடுகள் சீனாவின் உள் நுழைவைத் தடுத்திருக்க கூடிய நிலையிலேயே இருந்தன.

ஆனால், சீனா தனது கடன் பொறி இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி, இந்த நாடுகளுக்குள் புகுந்து விட்டது.

இவ்வாறான நிலையில், இலங்கையையும் அவ்வாறு இழந்து விடக் கூடாது என்பதில், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பு உறுதியாக இருக்கிறது.

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழு தலைவர் ரொபேர்ட் மெனெண்டஸ், அமெரிக்கா இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா, மற்றும் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பென்னி வொங் ஆகியோருக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில், ராஜபக்ஷக்களின் நிர்வாகத்தின் கீழ் மனிதாபிமானப் பேரழிவின் விளிம்பில் உள்ள இலங்கை மீது, குவாட் அமைப்பு அதீத கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். இந்தக் கடிதம், நெருப்பில்லாமல் புகையாது என்பதை நினைவுபடுத்துகிறது.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பது குறித்த சில இரகசிய நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதையே இந்த விவகாரங்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

நான்கு நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்திருந்த அவுஸ்திரேலிய பிரதிப் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான, ரிச்சர்ட் மார்லெஸ், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை கடந்த புதன்கிழமை சந்தித்த பின்னர், அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்றுக்கு செவ்வியளித்திருந்தார்.

அந்தச் செவ்வியில் சீனாவின் அச்சுறுத்தல் குறித்தும், இலங்கைக்கான உதவி குறித்தும் அவர் சில விடயங்களை தெரிவித்திருந்தார்.

சீனா எங்களின் மிகப்பெரிய பாதுகாப்பு கவலையாக உள்ளது. இந்தியாவும், அவுஸ்ரேலியாவும், இதனை இணைந்து கையாள முயற்சிக்கின்றன. இது இலகுவான பிரச்சினை அல்ல. என்று அவர் கூறியிருந்தார். அத்துடன் இலங்கைக்கு உதவும் வகையில் முக்கிய பங்காளிகளுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு உள்ளது எனவும், இப்போது எமது கவனம் எப்படி, இருதரப்பு விடயங்களில் இலங்கைக்கு உதவ முடியும் என்பதில் தான் இருக்கிறது. என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

சீனாவின் மூன்றாவது அதிநவீன விமானம் தாங்கி கப்பலான, பியூஜியான் (Fujian) கடந்த 17ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டுள்ள நிலையில், குவாட் நாடுகள் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தங்களின் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை தனியொரு நாடாக கையாளாமல், குவாட் பங்காளிகள், பொதுப்படையான ஒரு திட்டத்தின் கீழ் கையாளுவதற்கு முனைகின்றன என்பதை, அவுஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரின் கருத்து புலப்படுத்துகிறது.

அதே வேளை, அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, அவுஸ்ரேலியா மாத்திரமன்றி, நியூ சிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளும், இலங்கைக்கு நேரடியான நிதி உதவிகளை வழங்குவதற்கு இன்னமும் உத்தரவாதங்களை வழங்கவில்லை.

ஆனால் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படுகின்றன. அவை அளவில் சிறியவை. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தின் ஊடாகவே, பொருளாதார நெருக்கடியை அந்த நாடுகள் கையாள முனைகின்றன.

அதற்கு அப்பால், முதலீடுகளின் மூலமாக பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதில் பொதுவானதொரு திட்டத்தின் கீழ், இந்தியா மற்றும் குவாட் நாடுகள் செயற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

அனைத்து நாடுகளினதும் குரல் ஒரேவிதமாகவே ஒலிப்பதில் இருந்து இதனை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அந்த பொதுப்படையான மூலோபாய திட்டம் என்னவென்பது, இப்போதைக்கு இரகசியமானதாகவே உள்ளது. போகப் போகத் தான் வெளிச்சத்துக்கு வரும்.

## ராதிகா எத்தியோப்பியா தொடர்பான சர்வதேச

(5ம் பக்கத் தொடர்ச்சி) மூன்றாவதாக இலங்கையைச் சேர்ந்த ராதிகா குமாரசுவாமி நியமிக்கப்பட்டிருக்கின்றார். இக்குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றிய ஃபற்றோ பென்சூடா கடந்த (8) பதவி விலகியதையடுத்தே இந்த நியமனம் இடம் பெற்றிருக்கின்றது. எதியோப்பியாவில் கடந்த 2020 நவம்பர் மாதத்திலிருந்து இடம் பெற்ற சர்வதேச மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான மற்றும் அகதிகள் சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்வதற்காக கடந்த 2021 டிசம்பர் 17 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்கள் குழு உருவாக்கப்பட்டது.

ராதிகா குமாரசுவாமி மனித உரிமைகள் சட்டத்தரணி என்ற ரீதியில் பல வருட கால அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், அவர் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது சகோதரரே இலங்கையின் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரும் தற்போதைய அரசின் நெருக்கடியைத் தீர்க்கும் பொருளாதாரக் குழுவில் இடம்பெறும் இந்திரஜித் குமாரசாமி ஆவார்.

# ஆட்சி மாற்றங்களும் தமிழர் பிரச்சனைக்கான தீர்வும்!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -





ஆட்சி மாற்றமொன்று தேவை அதன் மூலம்தான் பிரச்சினைகளை தீர்க்க முடியுமென்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் எந்தப் பிரச்சினைகளை பற்றிப் பேசுகின்றார்? ஒரு வேளை அவர், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பில் பேசினால், ஆட்சி மாற்றம் தேவையென்னும் வாதம், சரியானது தான் ஏனெனில், பொருளா தார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், ஒரு ஸ்திரமான அரசாங்கம் இருக்க வேண்டியது கட்டாயமானது. தற்போதுள்ள அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

ஒரு புறம் ராஜபக்சக்கள் வீழ்சியுற்றாலும் கூட மறு புறமாக அவர்கள் பொதுஜன பெரமுனவிற்குள் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். ஒரு ஆசன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், அதிகாரங்கள் போய் சேர்வதை உறுதிப்படுத்துவதற்கான 21வது திருத்தச்சட்டமானது, தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருக்கின்றது.

இந்த நிலையில் ஒரு தேர்தல் இடம் பெற்றால் மட்டும் தான் இவை அனைத்திற்கும் ஒரு முடிவு கிடைக்கும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், சம்பந்தன் கூறுவது போன்று, ஒரு ஆட்சி மாற்றம் அவசியம் தான். ஆனால் ஒரு வேளை, சம்பந்தன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை கருத்தில் கொண்டு தான், பேசுகின்றார் என்றால், ஆட்சி மாற்றம் தொடர்பில் கேள்விகளுண்டு. ஏனெனில் 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பூ ர்த்தி செய்யவில்லை. புதிய அரசியல் யாப்பு ஒன்றிற்கான கற்பனையுடன் காலம் விரயம் செய்யப்பட்டது.

முன்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் நன்மைகளை தராத போது இனி வரப்போகும் ஆட்சி மாற்றமொன்றின் மூலம் எவ்வாறு தமிழ் மக்கள் நன்மைகளை பெறமுடியும்? இந்தக் கேள்விக்கான பதிலை கட்டுரையின் பின்பகுதியில் நீங்கள் காணலாம். முதலில் ஆட்சி மாற்றங்களை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

இலங்கைத் தீவில் ஏற்படும் எந்தவொரு பிரதான அரசியல் மாற்றங்களும், தமிழ் மக்களை முன் வைத்து ஏற்படுவதில்லை. ஆகக் குறைந்தது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஒரு விடயமாகக் கூட இருப்பதில்லை. அது ஒரு போதும் நிகழவும் மாட்டாது. தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் எவையுமே, தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசுவதும் இல்லை. அவ்வாறு பேசினால் தங்களின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படுமென்றே அவர்கள் கருதுகின்றனர்.

அவ்வாறாயின் மாற்றங்கள் எந்த அடிப்படையில் நிகழ்கின்றன? அனைத்துமே தென்னிலங்கை அதிகார மையத்திற்குள் ஏற்படும் முரண்பாடுகளின் காரணமாகவே நிகழ்கின்றன. இந்த மாற்றங்களே ஆட்சி மாற்றத்தை உந்தித் தள்ளுகின்றது. இவ்வாறு தான் 2015இல் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

தற்போது மீண்டுமொரு ஆட்சி மாற்றம் தொடர்பில் சிந்திக்கப்படுவதும் இந்த அடிப்படையில் தான். மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆதிக்கத்தின் மீதான அச்சத்தினடிப்படையில் தான், 2015 ஆட்சி மாற்றத்திற்கான கூட்டணி உருவாக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேனவை மகிந்த முகாமிலிருந்து உடைத்தெடுப்பதற்கான வாய்ப்பான சூழல் அங்கிருந்தது. ராஜபக்ச குடும்ப அரசியல் ஆதிக்கத்தின் மீதேற்பட்ட அதிருப்திகளின் விளைவாகவே, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அணியினர், மகிந்தவிற்கு எதிராக அணி திரண்டனர். ராஜபக்ச முகாமின் உடைவைப் பயன்படுத்தியே, ராஜபக்சவை வீழ்த்துவதற்கான வியூகம் வகுக்கப்பட்டது. இந்த கூட்டணிக்கான மேலதிக ஆதரவாகவே தமிழ் மக்களின் வாக்குகள் பயன்பட்டன. இதன் காரணமாகவே, ஆட்சி மாற்றத்தின் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு ஒரு விடயமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன் வைத்து அந்த ஆட்சி மாற்றம் நிகழவில்லை. 2015 ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் இடம் பெற்ற விடயங்களிலிருந்தே, நீங்கள் இதனை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். நல்லிணக்கம், அரசியல் தீர்வு தொடர்பில் ஆடம்பரமாக விவாதிக்கப்பட்டாலும் கூட, இறுதியில் ரணில்-மைத்திரி அதிகார மோதலைத் தொடர்ந்து, அனைத்து முயற்சிகளும் பூச்சிய நிலைக்கு சென்றது.

இப்போது ஆட்சி மாற்றத்தை எவ்வாறு கையாளுவதென்னும் கேள்விக்கு வருவோம். இந்தக் கட்டுரையாளர் மேலே குறிப்பிட்டவாறு ஆட்சி மாற்றத்தை விளங்கிக் கொண்டால், ஆட்சி மாற்றத்தில் தமிழர்கள் ஒரு போதுமே பிரதான விடயமாக இருக்க மாட்டார்கள் என்பதை புரிந்து கொள்வதில் சிக்கல்கள் இருக்காது. இந்த அடிப்படையிலிருந்து தான், எனவே, ஆட்சி மாற்றங்களை எவ்வாறு உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளலாமென்று, தமிழ் தலைமைகள் தான் சிந்திக்க வேண்டும். குறிப்பிட்ட அரசியல் சூழலில் எதனை முன்னிறுத்த வேண்டும் என்பதை தமிழ் தலைமைகளே சிந்திக்க வேண்டும். அதனடிப்படையில் குறிப்பிட்ட சூழலில் எடுத்துக் கொள்ளக் கூடிய விடயங்களை இலக்கு வைத்து செயற்பட வேண்டும்.

அவ்வாறானதொரு தூரநோக்கு மிக்க பார்வை சம்பந்தனிடம் இருந்திருந்தால், 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி உச்சளவில் பயன்படுத்தியிருக்க முடியும் ஆனால் சம்பந்தனது தவறான அரசியல் அணுகுமுறைகளால், கிடைத்த அருமையானதொரு வாய்ப்பு கை நழுவியது. ஆட்சி மாற்றத்திற்கான சூழலொன்று தெரிந்த சந்தர்பத்தில், இந்தக் கட்டுரையாளர் சம்பந்தனிடம் சில விடயங்களை வலியுறுத்தியிருந்தார்.

அதாவது, இந்த ஆட்சி மாற்றம் அதிக காலத்திற்கு நீடிக்காது ஏனெனில், இரண்டு முற்றிலும் மாறுபட்ட அரசியல் கருத்தியல், வெளிவிவகார பாரம்பரியம் கொண்ட கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரும், இணைந்து முன்னெடுக்கும் இந்த ஆட்சி மாற்றமானது, நிச்சயம், உள் முரண்பாடுகளுக்குள் சிக்கும், எனவே சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, பெறக் கூடிய விடயங்களை பெற முயற்சிப்பதே சரியானதென்று இந்தக் கட்டுரையாளர் சம்பந்தனிடம் வலியுறுத்தியிருந்தார். ஆனால் சம்பந்தன் எதனையும் உள்வாங்கிக் கொள்ளவில்லை.

புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டு வரமுடியுமென்று நம்பி செயற்பட்டது தான், சம்பந்தன் மேற்கொண்ட மோசமான தவறாகும். இந்தத் தவறிலிருந்து தான் அனைத்து தவறுகளும் நிகழ்ந்தன. உண்மையில் அப்படியானதொரு அரசியல் யாப்பை கொண்டு வருவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இருந்திருக்கவில்லை. ஆனாலும் புதிய அரசியல்யாப்பு என்னும் பெயரில், காலம் வீணடிக்கப்பட்டது.

இதற்கு பதிலாக, இருக்கின்ற அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி, மாகாண சபை நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம். இதனை, நான் உட்பட, சிலர் பரிந்துரைத்திருந்த போதும், சம்பந்தன் அவர்களை பொருட்படுத்தவில்லை. அதே வேளை, கூட்டமைப்பு தவறான பாதையில் செல்வதாக வெளியிலிருந்து சுட்டிக் காட்டியவர்களும், வரமுடியாத புதிய அரசியல் யாப்பிற்குள் எவற்றையெல்லாம் உள்ளடக்க வேண்டுமென்றே விவாதம் புரிந்தனர். புதிய அரசியல் யாப்பின் மூலம் கூட்டமைப்பு ஒரு பாரிய சதியில் ஈடுபடுவதாக கதைகள் புனைந்தனர். ஆனால் இறுதியில் அனைத்து கதைகளும் பெறுமதியற்றுப் போயின. உண்மையில் கூட்டமைப்பு சதி செய்யவில்லை, மாறாக, கற்பனையில் காலத்தை விரயம் செய்தது. ஏனையவர்கள் கூட்டமைப்பின் கற்பனை பற்றி, கற்பனை செய்தனர். புதிய அரசியல் யாப்பு தொடர்பான உரையாடல்கள் அனைத்தும், இறுதியில், கற்பனை தொடர்பான கற்பனைகளுடன் முடிவுற்றது. எப்போதெல்லாம் யதார்த்தம் புறம் தள்ளப்படுகின்றதோ அப்போதெல்லாம் வெறும் கற்பனைகளிலேயே காலம் கரையும்.

மீண்டும் தென்னிலங்கையின் அரசியல் மோசமாக குழம்பியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் தான், ஆட்சி மாற்றமொன்றின் தேவை உணரப்படுகின்றது. நிச்சயம் அது தான் நிகழவும் போகின்றது. ராஜபக்சக்கள் வீழ்சியுற்றிருக்கின்ற சூழலில், புதியதொரு தலைமைக்கான பலப் பரிட்சையிலேயே தென்னிலங்கையின் அரசியல் நிலை கொண்டிருக்கின்றது. ராஜபக்சக்களின் (19ம பக்கத் தொடர்ச்சி) பொதுஜன பெரமுன, வீழ்ச்சியடைந்திருக்கின்ற அதே வேளை, எதிரணிக்குள்ளும் பிளவுகள் காணப்படுகின்றன. ஒப்பீட்டடிப்படையில், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அளவில் பெரிய எதிரணியாக இருந்த போதிலும் கூட சஜித் பிரேமதாசவினால் தனித்து அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. எனவே ஆட்சி மாற்றத்திற்கு ஒரு வலுவானதொரு கூட்டணி தேவை.

அதே வேளை ரணில் தற்போதைய நெருக்கடி நிலையை கையாளும் பொறுப்பை ஏற்றிருப்பதால், ஐக்கிய தேசியக் கட்சியை மீளவும் ஒழுங்கமைப்பதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் வலுவானதொரு கூட்டை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் முற்றிலுமாக நிராகரித்து விட முடியாது.

ஆனால் வரப்போகும் ஆட்சி மாற்றத்தின் போது, தமிழ் மக்களின் வாக்குகள் பிரதானமாக தேவைப்படுமென்றும் கூறி விட முடியாது. ஏனெனில் தென்னிலங்கையின் கட்சிகளுக்கிடையில், பலமானதொரு மோதல் நிலை இருக்கின்ற போது தான், தமிழ் மக்களின் வாக்குகள் மேலதிகமாக தேவைப்படும். அவ்வாறானதொரு போட்டி நிலை இல்லா விட்டால், ஆட்சி மாற்றத்தில் தமிழ் மக்கள் பிரதான பங்கை வகிக்க முடியாமலும் போகலாம். எது எவ்வாறிருப்பினும், கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்பத்தையும், பயன்படுத்திக் கொள்வது, தமிழ் தலைமைகளின் ஆளுமையில் தான் தங்கியிருக்கின்றது.

## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா நூல் வெளியீட்டு விழா அறிவித்தல்

இணுவில் திருவூ ர் ஒன்றியம் - கனடாவின் அனுசரணையில் இணுவிலான் சிகாகோ பாஸ்கரின் படைப்பிலே இரு நூல்களின் வெளியீடு

மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்

சீனிப் புளியடி (சிறுகதைத் தொகுப்பு )

காலம்: 02-07-2022 (சனிக்கிழமை)

இடம் : கனடா கந்தசுவாமி கோவில் விழா மண்டபம்

**733 Birchmount Road**, ஸ்காபுரோ

நேரம்: மாலை 5.00 மணி

கனடா வாழ் இணுவில் மக்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் அனைவரையும் இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு 647-200-2177 சாந்தி சர்வானந்தா 416-430-0422 மு.கிருபாகரன் 416-732-5898 ப. கஜஜெயன் 262-598-4650 இணுவிலான் சிகாகோ பாஸ்கர்

# அ.தி.மு.க.வின் கிரீடம் யாருக்கு?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
– குடந்தையான் –

தமிழக அரசியல் வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் நடந்திராத வகையில் பல களேபரங்கள் அ.தி.மு.க.வின் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தில் அரங்கேறியுள்ளன. இதற்கு பின்னணியில் மத்தியில்ஆளும் பா.ஜ.க.வின் மறைமுக பங்களிப்பு இருக்கிறது என்று ஒரு பிரிவினரும், மாநிலத்தில் ஆளும் தி.மு.க.வின் மறைமுக பங்களிப்பும் இருந்தது என்று மற்றொரு பிரிவினரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கின்றார்கள்.

ஆனால் ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு கட்சியை வழிநடத்த கட்சியின் பொதுக் குழுவால் ஒப்புக் கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட இரட்டை தலைமை தேர்தல் நேரத்தில் கூட்டணி அமைப்பதிலும், கட்சியின் வெற்றிக்காக பாடுபடுவதிலும் முரண்பாடுகளும், சுமூகமான உடன்பாடுகளும் மேற்கொள்ளாததால் வலிமையான எதிர்க்கட்சியாக உருவெடுத்தும், தி.மு.க.விற்கு எதிராக அரசியல் செய்ய இயலாத நிலையில் அக் கட்சி தவித்து வருகின்றது.

இதன் காரணமாகவே கட்சிக்கு உடனடியாக ஒற்றைத் தலைமை வேண்டும்' என்ற நிலைப்பாட்டிற்கு தொண்டர்கள் செயற் குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர். ஆனால் தேர்தல் ஆணையகத்தின் நெருக்கடி காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறாத கட்சியின் பொதுக்குழு மற்றும் செயற் குழுவை கூட்ட வேண்டிய கட்டாய நெருக்கடியில் 'இரட்டைத் தலைமை' இருந்தது. இதனால் கட்சியின் ஒருங்கிணைப்பாளரான பன்னீர்செல்வம், ஜீன் 23ஆம் திகதியன்று கட்சியின் பொதுக் குழு மற்றும் செயற்குழு நடைபெறும் என்று முதலில் அறிவித்தார். ஆனால் இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்தி, 'ஒற்றை தலைமை குறித்த தனி தீர்மானத்தை' பொதுக்குழுவில் அறிமுகப்படுத்தி, அதற்கு ஒப்புதல் பெற வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டார். இதற்காக கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோரிடையே பேச்சுவார்த்தை நடத்தி தனக்கு சாதகமான நிலையை உருவாக்கினார். இதனை சற்று தாமதமாக தெரிந்து கொண்ட பன்னீர்செல்வம், ஒற்றைத் தலைமை குறித்த தீர்மானத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று பகிரங்கமாக தெரிவித்ததுடன், பொதுக்குழு ,செயற் குழு கூட்டங்களை தவிர்க்கவும் தீர்மானித்தார். கட்சியினுள் தனக்குச் சாதகமான நிலைமைகள் இல்லையென்றவுடன் பன்னீர் செல்வம் தேர்தல் ஆணையத்திற்கு செல்வேன், சின்னத்தை முடக்குவேன், சட்டம் ,ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் ,உள்ளிட்ட அச்சுறுத்தல்களை வெளிப்படுத்த ஆரம்பித்தார். ஆனால் அம்முயற்சிகள் பலனளிக்கவில்லை. அடுத்த கட்டமாக பொதுக்குழு உறுப்பினர்களுக்கு



பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தில் பங்கு பற்ற வேண்டாம் என்று கோரி கடிதம் எழுதினார். இந்த தருணத்தில் அவருக்கு ஆதரவாக இருந்த சென்னை தெற்கு, கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் கோவையை சேர்ந்த சில நிர்வாகிகள் திடீரென பழனிச்சாமிக்கு ஆதரவளித்தனர்.

கட்சியின் கட்டுப்பாடு தன் கையை விட்டு செல்வதை தாங்கிக்கொள்ள ,யலாத பன்னீர்செல்வம், பொதுக்குழு மற்றும் செயற் குழுவை எதிர்த்து நீதிமன்றத்தை நாடினார். அவசர வழக்காக விசாரித்த தனி நீதியரசர், 'ஒரு கட்சியின் பொதுக்குழுவில் என்ன முடிவு எடுக்கலாம்? என்ன முடிவு எடுக்கக் கூடாது? என்று நீதிமன்றம் தலையிட்டு சொல்ல முடியாது. அது கட்சி பொதுக்குழு உறுப்பினர்களின் அரசியல் சார்ந்த உரிமை" என்று குறிப்பிட்டு, பொதுக் குழு கூடுவதற்கு தடை விதிக்க மறுத்து விட்டார். நீதிமன்ற உத்தரவு தமக்கு சாதகமாக கிடைத்தவுடன் பழனிச்சாமி மற்றும் அவரது தரப்பினர் உற்சாகமடைந்தனர். 'ஒற்றை தலைமையே வா', 'கழகத்தின் பொதுச்செயலாளரே வா' என்ற கோஷத்துடன் மக்கள் ஆதரவை திட்டுவதற்குரிய நடவடிக்கைகள் வெகுவாக முன்னெடுக்கப்பட்டன.

பொதுக்குழு கூடுவதற்கு முதல் நாள் ,ரவே கட்சி முழுமையாக எடப்பாடியின் கட்டுப்பாட்டிற்குள் சென்று விட்டது என்பதை பன்னீர்செல்வம் உணர்ந்து கொண்டாலும், தன்னுடைய அரசியல் செல்வாக்கை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்கு அவர் தள்ளப்பட்டார். தனக்கு ஆதரவளித்த டெல்லி பா.ஜ.க. தலைமையுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளில் ஈடுபட்டார். சமகாலத்தில் பழனிச்சாமி, காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தியுடன் தொலைபேசியில் ஐந்து நிமிடங்கள் வரை பேசிய தகவல்கள் பா.ஜ.க. தலைமையின் காதுகளில் போடப்பட்டது.

இதனால் அதிர்ச்சி அடைந்த பா.ஜ.க. தலைமை, பன்னீர்செல்வத்திற்கு தனது ஆதரவு கரத்தை நீட்டும் தீர்மானத்தினை எடுத்தது. விடயமறிந்த எடப்பாடி தரப்பு, குடியரசு தலைவர் தேர்தலில் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் யஷ்வந்த் சின்ஹாவிற்கு ஆதரவு கேட்டுத் தான் ராகுல்காந்தி உரையாடியதாக ஒப்புதல் வாக்குமூலமளித்தனர். எனினும், பா.ஜ.க.தலைமை தன் முடிவில் மாறாது, பன்னீர்செல்வத்துக்கே ஆதரவளிப்பதில் உறுதியாக இருந்தது.(22ம் பக்கம் பார்க்க)



# ஆத்மார்த்த அஞ்சலி

## கனடா இந்துமாமன்றத்தின் வாழ்நாள் செயலதிபர்

## மாண்புமிகு வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர்

பூமியோடு: **18 Jan, 1949** சாமியோடு: **27 June, 2022**




**உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்குவதில்லை !**

கள்ளமில்லா சிரிப்பு கனிவான அணைப்பு
உள்ளம் எல்லாம் நிறைந்து
உதவிடும் தொண்டன்
வெள்ளமெனப் பாய்கின்ற
தருமத்தின் புதல்வன்
தெள்ளமுதாம் சைவத்தினை
சைவநீதியாய் செப்பிய தமிழன்
கடந்த மூன்று தசாப்தங்களாக கனடாவில்
“கனடா இந்துமாமன்றம்” என்ற அமைப்பின்
செயலாளராக பணியாற்றி தொண்டு செய்து
வந்த பன்னாளுமையும், பேராண்மையும்
நிறைந்த செயல் வீரன்
வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர்
எம்மை விட்டு பிரிந்தார் என்பதனை
ஆழ்ந்த கவலையுடனும் கண்ணீருடனும்
பகிர்ந்து கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்


கனடா இந்து மாமன்றம்

Canada Hindu Maamantram


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடல் ஆரோக்யம் உண்டாகும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். அலைச்சல் இருக்கும். பணவரவும் இருப்பதுடன் பயணங்கள் செல்லவும் நேரலாம். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் கூடுதல் லாபம் கிடைக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் சாதகமான பலன் தரும்.





ரிஷபராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நற்பலன்கள் உண்டாகும். வாழ்க்கையில் எதிர் பாராத திடீர் திருப்பங்கள் உண்டாகலாம். சந்திரன் சஞ்சாரத்தால் மனதுக்கு பிடித்தமான காரியங்களை செய்து மனநிறைவடைவீர்கள். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி அலுவலக வேலைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சி ஏற்படும்.




மிதுனராசி அன்பர்களே! எண்ணிய காரியம் ஈடேறும். காரிய அனுகூலம் உண்டாகும். சந்திரன் சஞ்சாரத்தால் எதிர்பாராத சந்திப்புகள் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். தன்னம்பிக்கை உண்டாகும். அடுத்தவருக்கு உதவி செய்து அதன் மூலம் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கை நழுவி சென்றவை முயற்சிகள் சாதகமான பலனை தரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! எதிலும் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம். அடுத்தவரை நம்பி எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மையை தரும். ஆன்மிக ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடியும். புதிய நண்பர்கள் மூலம் நன்மை உண்டாகும். தந்தையின் உடல்நிலையில் கவனமாக இருப்பது நல்லது. கடன் விவகாரங்கள் கால தாமதமாகும். வர வேண்டிய பணம் தாமதப்படலாம்.





சிம்மராசி அன்பர்களே! எந்த விஷயத்திலும் உடனடி தீர்வு காண முடியாத இழுபறி நிலை காணப்படும். ஆனால் இந்த நிலை மாறி நன்மை ஏற்படும். மனதில் திடீர் கவலை தோன்றும். சகோதரர் வழியில் மனவருத்தம் தரக்கூடிய சம்பவம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். புதிய தொடர்புகள் உண்டாகும்.சிலர் புதிய வீடு கட்டும் பணியை தொடங்குவர். உத்யோகத்தில் பதவி உயர்வு, தேடி வரும். கனவு தொல்லையால் நீண்ட நேரம் கண் விழிக்க நேரிடும். தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. சகோதரர் வழியில் மனவருத்தம் உண்டாகலாம். திடீரென்று கவனம் தடு மாறலாம். தொழில் வியாபாரத்தில் உழைப்பிற்கு பின் நல்ல பலன் பெறுவார்கள்.





துலாம்ராசி அன்பர்கள் அனுகூலமான பலன்கள் உண்டாள!கும். எடுத்த காரியங்களில் தொய்வு ஏற்பட்டாலும் பின்னர் வேகம் பிடிக்கும். வீண்மனசஞ்சலம் உண்டாகும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் புதிய வாடிக்கையாளர் பிடிக்க கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தங்களது பணிகளை தாமதம் இல்லாமல் செய்து முடிப்பீர்கள். பணவரத்து திருப்தி கரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகளால் மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! காரிய தடைகள் நீங்கும். திட்டமிட்ட படி எல்லாம் நடக்கும். ஆடம்பரமான பொருட்களை வாங்குவீர்கள். கடன் தொல்லை குறையும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணம் தாமதமாக வந்த சேரும். உத்யோகத்தில் பல தடைகளை சந்திக்க வேண்டி இருந்தாலும் முடிவில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களை தள்ளி போடுவது நல்லது. திடீர் உடல்நலபாதிப்பு ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் நிதானமான போக்கு காணப்படும். பணவரத்து தாமதப்படும். தொழில் வியாபாரத்திற்காக கடன் வாங்க நினைப்பதை தள்ளி போடுவது நல்லது. உத்யோகத்தில் வேலை பளுவால் மனசலிப்பும் உண்டாகும். இறுதியில் இந்தநிலை மாறி நன்மை ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! சுப பலன்கள் உண்டாகும். எடுத்த காரியம் தாமதத்திற்கு பிறகு சாதகமான பலன் தரும். அவசரப்பட்டு வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத திடீர் செலவு உண்டாகலாம். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்கள் தாமதமாக நடைபெறும். புதிய ஆர்டர்கள் கிடைத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்ற பாடுபட வேண்டி இருக்கும்.




கும்பராசி அன்பர்களே! மனதில் தைரியமும், உற்சாகமும் கூடும். சாதகமான பலன்கள் இருக்கும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாய்க்கு ருசியாக உணவுகளை உண்பீர்கள். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வெளி வட்டார தொடர்புகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் பொறுப்புகள் அதிகரிக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.




மீனராசி அன்பர்களே! எதிர்பார்த்த வேலைகள் வேகமாக நடந்து முடியும். இது வரை இருந்த அலைச்சல்களும் குறையும். செலவு அதிகரிக்கும் அதே நேரத்தில் வரவும் இருக்கும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நன்மை தரும். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# கோட்டா கோ கமவுடன் பேசுதல்

(15ம் பக்கத் தொடர்ச்சி) உரிமையை ஏற்றுக் கொள்ள வைப்பதில் சவால்கள் உண்டு என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டார். அவ்வாறான ஒரு கோரிக்கையை முன் வைப்பது இப்பொழுது காலத்தால் முந்தியது என்றும் அவர் கருத்து தெரிவித்தார். அதாவது குமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான இரத்தம் சிந்தும் அனுபவங்களின் பின்னரும் அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத் திடலில் போராடிக் கொண்டிருக்கும் தரப்புகளில் மிகச் சில அமைப்புக்களைத் தவிர பெரும்பாலானவை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என்பதே கோட்டா கோகம யதார்த்தம் ஆகும்.

தென்னிலங்கை அரசியலில் ஆகப் பிந்திய யதார்த்தம் அது. அதைத் தமிழ் மக்கள் எதிர் கொள்ள வேண்டும். காலிமுகத் திடலில் தமிழ் செயற்பாட்டாளர்கள் தமது நிலைப்பாடுகளை எதனோடும் எவரோடும் சமரசம் செய்யாமல் வெளிப்படுத்த வேண்டும். தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைக்க வேண்டிய ஒரு களம் அதுவென்று குமார் குணரட்னம் போன்றவர்கள் கூறுகிறார்கள்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாகவும் கூர்மையாகவும் வெளிப்படுத்தி விட்டார்கள். இந்நிலையில் நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் அதிகார மையங்களை உருவாக்கப் போவதாக கூறும் தரப்புக்கள் அதற்கு முன்னோடியாக உருவாக்கி வைத்திருக்கும் ஒரு போராட்டக் கிராமத்திலும் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாகவும் சமரசத்துக்கு இடமின்றியும் முன் வைக்க வேண்டும் என குமார் குணரட்னம் கூறுகிறார்.

அது மக்கள் அதிகார மையம் என்று. அங்கிருப்பது சிங்கள மக்களின் அதிகாரமா? அல்லது தமிழ் மக்களின் அதிகாரமும் தானா? என்பதனை ஒரு முறை பரீட்சித்து பார்த்தால் என்ன? கண்டி மற்றும் கொழும்பு கோட்டா கோகம கிராமத்திலிருப்பவர்கள் ஒரு வார இடைவெளிக்குள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஒரு பின்னணியில், தமிழ் செயற்பாட்டாளர் களும் காலிமுகத்திடலுக்குப் போய் தமது நிலைப்பாடுடைத் தெரிவித்தால் என்ன?

# அ.தி.மு.க.வின் கிரீடம் யாருக்கு?

(20ம் பக்கத் தொடர்ச்சி) அதே நேரம் பன்னீர்செல்வம் தரப்பு, நள்ளிரவில் நீதிமன்றத்தை நாடி தனி நீதியரசர் அளித்த உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்றும், ஒற்றை தலைமை குறித்த தனி தீர்மானத்தை பொதுக் குழுவில் ஒருங்கிணைப்பாளரான எம்முடைய அனுமதி பெறாமல் தாக்கல் செய்யக் கூடாது என்றும் வழக்கு தொடுத்து. இரண்டு நீதியரசர்களும் இந்த வழக்கு மீதான விசாரணையை .ரண்டு மணிக்கு ஆரம்பித்து நான்கரை மணிக்கு நிறைவுக் கொண்டு வந்தனர். `பொதுக் குழுவில் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட .இருபத்தி மூன்று தீர்மானங்களை தவிர்த்து புதிதாக எந்த தீர்மானத்தையும் முன் மொழியக் கூடாது' என்ற நிபந்தனையை விதித்து தீர்ப்பளித்தனர்.

இந்த தீர்ப்பு வெளியான பின்னர், எடப்பாடி தரப்புக்கு பன்னீர்செல்வத்தின் மீது ஆத்திரமேற்பட்டது. இந்த தருணத்தில் டில்லி ஆலோசனைக்கு அமைவாக பன்னீர்செல்வம் பொதுக் குழுவில் பங்கேற்க தீர்மானித்தார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அ.தி.மு.க.வின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் சென்னை வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி மஹாலுக்கு வருகை தந்தனர். அங்கு எடப்பாடி தரப்பின் எதிர்ப்புக்களுக்கிடையே, பன்னீர்செல்வமும் பிரசன்னமானார்.

கூட்டம் ஆரம்பமானதையடுத்து, மேடையில் பேசிய எடப்பாடி பழனிச்சாமி, `தற்காலிக அவைத்தலைவராக நியமிக்கப்பட்ட தமிழ் மகன் உசேன் அ.தி.மு.க.வின் நிரந்தர அவைத்தலைவராக நியமிக்கப்படுகிறார்' என்று அறிவித்தார். அ.தி. மு.க.வின் துணை ஒருங்கிணைப்பாளரான கே.பி.முனுசாமி சமர்ப்பித்த இருபத்தி மூன்று தீர்மானங்களும் பொதுக்குழு உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டன. அடுத்த மாதம் 11ஆம்திகதி ஒற்றை தலைமை வேண்டும் என்ற தீர்மானத்துடன் மீண்டும் அனைத்து தீர்மானங்களும் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார். அத்துடன் அ.தி.மு.க பொதுக்குழு எந்தவித முடிவும் எடுக்காமல் நிறைவடைந்தது. இதனையடுத்து பன்னீர் செல்வம் டில்லிக்குச் சென்று தேர்தல் ஆணையத்தை அணுகினார். அ.தி.மு.க.வின் அவை தலைவர் பதவி தற்காலிகமானது தான் என்றும், தம்முடைய ஒப்புதல் இல்லாமல் அவரை நிரந்தமாக நியமிக்க இயலாது என்றும் குறிப்பிட்டு, அவர் தலைமையில் அடுத்த மாதம் 11ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் பொதுக்குழுவிற்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் புகார் மனுவை அளித்திருக்கிறார்.

அதனால் அடுத்த மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் திட்டமிட்டப்படி நடைபெறுமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதே தருணத்தில் தலைமைக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும், பன்னீர் செல்வமும், சரி, ஒற்றை தலைமைக்கு குறி வைத்து காய் நகர்த்தி வரும் பழனிச்சாமியும் சரி ஆளுமை மிக்க தலைவர் அல்ல. அவர்களை இயக்குபவர்கள் டில்லியிலும், கட்சிக்கு வெளியிலும் தான் உள்ளனர் என்பது தான் துரதிஷ்டமான நிலையாகும்.

# ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடியும் தமிழ்மக்களின் எதிர்கால வாய்ப்புக்களும்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) முறையான திட்டமிடலும் செயற்படுத்தலுமே முக்கியமானது. அதனை எமது தலைமைகள் செய்யா விட்டாலும் எமது மக்கள் அதனைச் செயற்படுத்தலாம். அல்லது ஒரு புதிய தலைமை உருவாக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். அதன்மூலம் இந்த பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்லமுடியும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி) விடுமுறைகளில் இந்த விடுமுறை உள்வாங்கப்பட வேண்டும்.

21. மீண்டும் இணைந்து வாழ முடியாது என இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவிப்பார்களாயின், அவர்களுக்கு விவாகரத்தை வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (தவறான நடத்தை மற்றும் பாலியல் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தற்போது விவாகரத்து செய்ய அனுமதிக்கப்படுகின்றது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.)

22. தேசவழமை சட்டம், முஸ்லிம் சட்டம், மலைநாட்டு சட்டம் ஆகியன முழுமையாக நீக்கப்பட்டு, பொது சட்டத்தின் கீழ், அந்த சட்டங்கள் உள்வாங்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக
சேவையாற்றிவருபவரும் பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு
அழகு சேர்த்தவருமான

## கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்

அவர்களின்

சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன்,
அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்

# பாராட்டுப் பெருவிழா



JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA

**Saturday**
**July 2nd, 2022**
**6:30 PM**

உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின்
மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து
சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும்
வேண்டுகிறோம்.

**Kindly RSVP by June 20th, 2022**

உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto - ON - M1X 0C3
(Markham / McNicoll)
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
HIGHER STANDARDS
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு
நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி
உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும்
தேவை எங்களுக்கு உண்டு என்பதை
இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown³
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.